பத்திரக்கிரயம்

[illegible]
தனிப் ரூபா 5.00 இந்தியாவிற்கு தபாலுடன் 9.00
இலங்கை இந்தியா 8.00 இங்கிலாந்து தபாலுடன் 12.00
[illegible] 9.00 [illegible] 13.00
தனிப்பிரதி சதம் 5
முற்பணமனுப்பினாலன்றிக் கவனிக்கப்படமாட்டா

Registered as a Newspaper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1939

சிவமயம்

இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

விளம்பர விகிதம்

முதன்முறைக்கு
ஒரு அங்குலம் ரூபா 10.00 அரை அங்குலம் ரூபா 5.50
கால் அங்குலம் ரூபா 4.00 50 அடிக்கு ரூபா 1.00
அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி
[illegible]

விரோதி வருஷம் (1889 ஆவணி மாதம் 28-ம் திகதி ஆரம்பமானது

[புத்தகம் — ௫௧] யாழ்ப்பாணம்:— பிரமாதி ௵ தை ௴ ௨௬உ (1940 பெப்ரவரி 8 வியாழக்கிழமை) [இலக்கம் ௮௧]

மகோற்சவங்களின் உண்மைப் பொருள்

[இது சென்ற மார்கழி மாசம் (1940 ஜனவரி 4-ம், 5-ம், 6-ம் தேதிகளில்) யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்திற் கூடிய அகில இலங்கைச் சைவமகாநாட்டில், அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் செய்த பிரசாரணமாகும்.]

அன்புடையீர்!

1. நாற்பாதம்

ஆன்மாக்களுக்கு மானுட ஜன்மத்தினுல் வரும் பயன் சரியை, கிரியை, யோகம், ஞானம், என்னும் நான்கு பாதத்திலும் நின்று சிவபெருமானை வழிபட்டுப் பரம புருஷார்த்தமாகிய நித்தியானந்தமுத்தி அடைதலேயாம். முத்தியாகிய பேரின்ப ரசத்தை அநுபவித்தற்கு அரும்புபோல் விளங்கும் சரியையும், மலர்போல் விளங்கும் கிரியையும், காய்போல் விளங்கும் யோகமும், கனிபோல்விளங்கும் ஞானமும் படிகளாக இருக்கின்றன. அரும்பில்லாமல் மலர் உண்டாகாதவாறுபோலச் சரியை இல்லாதவர்களுக்குக் கிரியை பயன் கொடாது. மலர் இல்லாமற் காய் உண்டாகாதவாறு போலக் கிரியை செய்து அதனாற் சித்தி அடையாதவர்களுக்கு யோகம் பயன்கொடாது. காயில்லாமற் கனி உண்டாகாதவாறு, யோகமில்லாதவருக்கு ஞானம் பயன்கொடாது. கனி உண்ணுதவர் அதன் சுவையை அறியமாட்டாததுபோல ஞானமில்லாதவருக்கு முத்தியின்பம் கைகூடாது. அது,

"விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞான நான்கும்
அரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே"

எனத் தாயுமான சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியவாற்ருல் உணரப்படும்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கும் முறையே தாசமார்க்கம், புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் எனவும் பெயர் பெறும். காயத்தொழில் மாத்திரையானே சரியையை அனுட்டித்து வரவரப் பக்குவமுதிர்ந்து நுண்ணறிவு வரப்பெற்றோர் கிரியையை அனுட்டித்தற்குரியர். அகத்தொழிலானும் புறத்தொழிலானும் கிரியையை அனுட்டித்துப் பக்குவமுதிர்ச்சியுற்றோர் அகத்தொழிலானே யோகம் அனுட்டித்தற்குரியர். சரியை கிரியை யோகம் என்னும் மூன்றையும் அனுட்டித்த வரவர உண்டாகும் பக்குவ முதிர்ச்சியினுல் ஞானம் அனுட்டித்தற் குரியராவர்.

இங்ஙனமாகக் கிரியைகளிற் பயனில்லை என அவற்றை இகழ்ந்து முத்தியடைய விரும்புவோர் படி வழியே ஏறிச் செல்லாது கீழ் நின்று ஏணியினுச்சிக்குப் பாய விரும்புவோரைப் போன்றவராவர். ஆகையால் எவரும் புறத்தும் அகத்தும் சிவபெருமானை வழிபடுதல் அத்தியாவசியகமேயாம்.

2. ஆலயம்

சிவபெருமான் எங்கும் வியாபகமாய் இருப்பினும் புறத்தே சிவலிங்க முதலிய திருமேனியும் குருவும் சங்கமமும் இடமாகக் கொண்டு நின்றும், அகத்தே உயிர் இடமாகக் கொண்டு நின்றும் ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டைக் கொண்டருளுவர். சிவபெருமான் இவ்விடங்களில் தயிரில் நெய்போல விளங்கி நிற்பர். மற்றை இடங்களில் பாலில் நெய்போல வெளிப்படாது நிற்பர். ஆதலினாலே நாமெல்லாம் நமது பரமபிதாவாகிய சிவபெருமானை குருலிங்க சங்கமமாகிய இடங்களிலே விதிப்படி சிரத்தையோடு வழிபடல் வேண்டும்.

இவ்வழிபாடு மேற்கூறிய சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கு மார்க்கத்தாரானும் செய்யற்பாலதேயாம். மல நீங்கிய சிவஞானிகளும் பூர்வ மலவாசனை தாக்காமைப்பொருட்டும், சிவானந்தம் மேன்மேல் வளர்தற்பொருட்டும், சிவலிங்க முதலிய திருமேனிகளை வழிபடல் வேண்டும். ஆன்மாக்களை முத்தியாகிய கரையில் ஏற்றும் காரணமாகவே மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூன்று வடிவாய்ச் சிவபெருமான் விளங்குகின்றனர். இவற்றை முறையாக வழிபடுவோர் உண்மை உபதேசம் பெற்று முத்தி அடைவர்.

சிவாலயத்தைச் சிவனெனவே கண்டு வழிபடுவோர் சிவன் முத்தராவர் எனச் சிவஞானபோதம் முதலிய அருணூல்கள் செப்புகின்றன. சிவாலயங்களில்லாதவூர் எவ்வித செல்வங்களால் நிறைந்திருப்பினும் திருவுள்ளவூரன்று; காடேயாம். ஆசாரியமூர்த்திகளாகிய அப்பர்சுவாமிகள் "திருக்கோயிலில்லாத திருவிலூருந் திருவெண்ணீறணியாத திருவிலூரும்……அவையெல்லாமூரல்ல வடவிகாடே" எனத் திருவாய் மலர்ந்தருளினார்கள். உபநிடதமும் "விபூதியில்லாத நெற்றி பாழ்; சிவாலயமில்லாத கிராமம் பாழ்" என்று கூறுகின்றது.

திருக்கோயில்களும் அங்கே நடைபெறும் பூசை உற்சவம் முதலியனவும், அகவழிபாட்டின் உண்மையை விளக்கி ஞானமுண்டாவதற்குக் கருவியாயுள்ளன. அது, தேவாலயங்களில் அமைக்கப்பட்டுள்ள மண்டபம், பிராகாரம், கோபுரம் முதலியவற்ருல் உணரப்படும். கருப்பக்கிரகம் முதலிய மண்டபங்கள் ஆறுதார ஸ்வரூபமாயுள்ளன. ஆலயத்திலுள்ள ஐந்து வீதிகளும் பஞ்சகோசங்களைக் குறிப்பனவாம். மூன்று வீதிகள் தூலம் சூக்குமம் காரணம் என்னும் முச்சரீரங்களைக் குறிக்கும். இரண்டு வீதிகள் தூலம் சூக்குமம் என்னும் இரு சரீரங்களைக் குறிக்கும்.

கோபுரத்தில் ஈசுரனது பராக்கிரமலீலாவிநோதங்களும்; அவரது அதிகாரம் பெற்ற விஷ்ணுவாதி தேவர்களதும், காமதேநு, அஷ்டதிக்குப் பாலகர், சூரிய சந்திரர் முதலியோரது உருவங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதனால் கடவுட்டன்மையின் சிறப்பை அறிந்து அவரிடம் அன்பு செய்தற்கு ஏதுவாகும்.

தூபி, கோபுரம் தூலலிங்கமெனவும், விமானத்துள் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கம் சூக்குமலிங்கம் எனவும், அதற்கு முன்னுள்ள பலிபீடம் பத்திரலிங்கம் எனவும் கூறப்படுமென்று திருமூல நாயனார் கூறியருளினார். சிவலிங்கம் நந்தி, பலிபீடம் என்னும் மூன்றனுள் சிவலிங்கம் பதியும், நந்தி பசுவும், பலிபீடம் பாசமுமாகக் கொள்ளப்படும். பதி, பசு பாசம் என்னும் மூன்றும் அநாதிநித்தியமென்னும் உண்மையை உணர்த்துதற்காகவே ஆலயங்களில் அவை மூன்றும் நேராகத் தாபிக்கப்பட்டுள்ளன. இதனாலே பதி ஒருவர் உண்டென்பதையும், அவர் சிவபெருமானே என்பதையும் உயிர்கள் பல என்பதையும் பாசத்தாற் பந்திக்கப்பட்ட உயிர் பதியாற்சுகத்தைப் பெறும் என்பதையும் சிவாலயம் உணர்த்துதலைக் கண்டுகொள்ளலாம்.

இக்காலத்திலே, சிவாலய வழிபாட்டின் மகத்துவம் அறியாத சிலர், ஆலயவழிபாடு கன்மிகளது வழிபாடென்றும், தாம் நிற்கும் நிலை பரமஞான நிலையென்றும், ஞானிகள் ஒருபோதும் தமக்கு வேருகக் கடவுள் ஒருவர் உண்டெனக் கொள்வதில்லையென்றும், அவ்வாறு கொள்வோர் ஞானமில்லாதவர் என்றும் உபதேசம் செய்து தாமும் கெட்டுப் பிறரையும் கெடுக்கின்றார்கள்.

(வரும்)

சங்கீதமே பெரிய சம்பத்து

ஸ்ரீ ஸி. இராஜகோபாலாச்சாரியார் சொற்பொழிவு

திருவையாற்றில் 27-ம் தேதி ஸ்ரீ தியாகப்பிரும்ம மகோத்சவத்தை ஆரம்பித்து வைத்தபோது சங்கீதந்தான் தேசத்தின் குறையாத செல்வம் என்றும், அங்கு ஒரு கலாசாலை நிறுவப்படவேண்டும் என்றும், சங்கீதத்தை எவரும் அனுபவிப்பார்கள் என்றும் அதன் மூலம் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை சாத்தியம் ஆகும் என்றும் ஸ்ரீமான் ஸி.ராஜகோபாலாச்சாரியார் தெரிவித்தார்.

நமது தேசத்திலுள்ள சம்பத்திலுள் சங்கீதந்தான் பெரிய சம்பத்து. நம்முடைய மதங்களிற் கூட மாறுதல் ஏற்பட்டாலும் ஏற்படலாம். ஆனால் சங்கீதத்தில் அது ஏற்படாது. சித்திரக்கலைகள் கூட வேறு தேசங்களுக்குக் கொண்டுபோகப்படலாம். இந்தச் சங்கீத சம்பத்தை மட்டும் கொண்டு போகவே முடியாது. ஆகையால் சங்கீத சம்பத்துத்தான் சுயராஜ்யத்திற்கு அறிகுறி; நம்முடைய சங்கீதத்தை வேறு தேச மக்கள் கற்றாலும் அச்செல்வம் இங்கு குறைவே குறையாது. சங்கீதத்தை அனுபவிக்கத் தெரியவேண்டும். தற்போதுள்ள பிள்ளைகள் சங்கீதத்தை நன்கு அனுபவிக்கிறார்கள். நான் பள்ளிக்கூடத்திற் படிக்கும்போது சங்கீதக் கச்சேரிக்கே போக அனுமதிக்கமாட்டார்கள். எனக்குச் சங்கீதம் தெரியுமென்று சொல்லிக்கொள்ள முடியாது. ஆனால், அதன் பெருமை எனக்குத் தெரியும். சமீபத்தில் சிதம்பரம் நான் போயிருந்தபோது அண்ணாமலைச் சர்வகலாசாலைச் சங்கீதகலாசாலைக்குப் போயிருந்தேன். சுதந்திரத்தை இழக்காத சங்கீதத்தைக் கண்டேன். அதைப்போல் எங்கும் பாடசாலைகள் ஏற்பட்டுச் சங்கீதம் அபிவிருத்தியுடையும்படி செய்யவேண்டும். குழந்தைகளுக்குக் கட்டாயமாகச் சங்கீதம் கற்றுக்கொடுக்கப்படவேண்டும். முற்காலத்தில் ரிஷிகள் தபஸ்செய்தார்கள். அதைத் தொடர்ந்து நாம் செய்யாததால் தபஸ் அப்போது செய்யப்பட்டதா என்ற சந்தேகம்கூட இப்போது நமக்கு ஏற்படுகிறது. ஆகையால், நமது சங்கீதத்தை நம் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுத்து விருத்தியடையும்படி செய்யவேண்டியது நமது சங்கீதவித்வான்களின் பொறுப்பேயாகும். ஸ்ரீமதி நாகரத்னம்மாள் சொல்லியபடி சங்கீத கலாசாலை ஒன்று சமாதிக்கு எதிரிலேயே ஸ்தாபனம் செய்யவேண்டியது அவசியந்தான். ஆனால், கஷ்டமான விஷயம். தனவந்தர்களின் சகாயமிருக்கும்பட்சத்தில் இது பெரிதான காரியமல்ல.

சங்கீதத்தில் வித்தியாசம் கிடையாது

சங்கீதத்தில் கர்நாடகசங்கீதம் ஹிந்துஸ்தான்சங்கீதம் என்ற வித்தியாசம் கிடையாது. இந்தியாமுழுதும் சங்கீதம் ஒன்றுதான். ஹிந்துக்கள் முஸ்லிம்கள் இவர்களுள் வித்தியாசமிருப்பதாகச் சொன்னாலும் சங்கீதத்தை இருவர்களும் நன்கு அனுபவிப்பார்கள். இந்தச் சங்கீதமே நமது நாட்டின் ஒற்றுமையை ஏற்படுத்தக்கூடும். இங்கு சங்கீத[illegible]வான்களால் ஏற்பட்டிருக்கும் [illegible]மை நீடூழி வாழவும் [illegible]ட்டம் வெற்றிகரமாக [illegible]படிக்கும் பிரார்த்திக்கிறேன்.

நல்லாசிரியர்கள் தோற்றமும் தாய்நாடும்

வித்துவான் அ. கிருட்டினமூர்த்தி

(முற்றொடர்)

இங்குக் கூறப்பட்ட இவற்றையெல்லாம் கண்டறியாதகுறிப்பிடத் தக்க ஆசிரியர்களும் இல்லை. அவ்வாசிரியர்கள் தாங்கள் புதிதாய்ப் பெற்ற நுண்ணறிவை விரைவாகத் தாய்நாட்டின் கல்வி வளர்ச்சிக்குப் பயன் படுத்த எண்ணினர். அவ்வறிவின் சிறப்பியல்களை அவர்கள் தாங்குப் பயன்படுத்துங் காலம் அவர்கட்குத் தீவினை வயத்தான் கிட்டாது போயிற்று. இது குறித்த அவர்கள் அடிக்கடி கழிவிரக்கமடைந்திருக்கின்றனர்.

மற்றும், பல வேறு கலத்திற்கும் கேடு தரக்கூடிய புறநாட்டு வழக்கங்களுக்கும் இலக்கியங்களுக்கும் மதிப்புக் கொடுத்த அவைகளையே மிகவும் போற்றினமையால், உயர்வகுப்பார் முன்னேறுதற்கு அவை பயன்பட்டனவன்றி, விரைவில் செருமானியமக்கள் செருமானியபாஷைக்குமுழு இடங்கொடுக்கவில்லை.

இனி, நிறம்படைத்த பெரியோர் எனப்படும் செருமானியப் புலவர் கலையும், நடை[illegible]ரைமையும் குறித்துச் சிறிது அ[illegible]வாம். அறிவுச் சுடர் கொளு[illegible] நல்லுழைப்பு களில் இவர்கள்[illegible]டர்ச்சியாக ஈடுபடவில்லை. வனீ? எடுத்துக் காட்டாகச் சுருக்கக் கூறுமிடத்தில் நமது, "வைலாந்து" எனப்படுமிடத்திற் பதிப்பிக்கப்பட்ட எல்லா நூல்களையும் ஒப்புநோக்கி, அவற்றிலடங்கிய பொருட்களை விளக்குவதில் திறமையும் உழைப்புஞ் சாலப் படைத்த, ஒரு வல்லுநரை எடுத்துக் கொள்வோம். ஆயின் அவர் நூல் முறைகளில் கொள்வனகொண்டு சிறப்புற எழுதியிருக்கும் அவர் தம் திறமையை நாம் பெருமையுடன் பாராட்டுகிறோம். அவர், தாமே அறிதின் முயன்று உலையாத உழைப்பினுல், நாளடைவில் திருத்தமான முறைகளைத் தேடினர். இதனால் உண்மையான நூற்சுவை முழுவதும் வளர்ச்சி பெறுவதாயிற்று. ஆதலின், இத்தகைய சிறிய நூல்களைத் திரட்டுமிடத்தில் ஒவ்வொரு நூல் நிலையத்தாரும் ஒல்லும் வகையெல்லாம் வருந்தி முயல்வார்களானால், அவற்றை நன்மை தரும் வகையின் எவ்வாறு பயன்படுத்துவதென்பதை அடுத்து வரும் ஆறறுண்டைய மக்கள் நன்கறிவார்கள். இது நமது நம்பிக்கை.

இனி வருங்காலத்தில் நம்முடைய விழுத்தகவுடைய எழுத்தாளரின் வரலாற்றை நாம் ஆண்மையுடனுலகுக்களிக்க கடிம். அவ்வரலாறு அவர்களின் நூல்களில் சிறியவாகப் பயின்ற செய்திகட்கேற்ப அவர் தம் முன்னேற்றவளர்ச்சியை விளக்கிக் காட்டுவதாக விருக்கும். இல்லையேல் அவர்கள் தாமாக இவை வேண்டுவன என்றுணர்ந்து நமக்கு அறிவித்தாலன்றி, அவர்களின் முன்னேற்றத்திற்கு உதவியாய் நின்ற செய்திகளையோ அல்லது அதற்குத் தடை பயந்து குறுக்கிட்ட இடையூறுகளையோ, அவர் செய்த நலங்களால் விளைந்த நன்மைகளையோ விளக்கமாக நாம் எதிர்பார்க்க முடியாது. எதிர்பார்ப்பின் அஃது இன்னும் சேய்மையிற் சென்று பயன்தருவதா மென்க.

பொறுமையுள்ள இளைஞர்கள் தற்காலத்தில் தம்மிள பருவத்திலேயே உயர்நிலையடைகிறார்கள். தாம் எடுத்த பொருளைக் குறித்து அதற்கேற்ற துயநடையில் எழுதுகிறார்கள். இலக்கியத்திற்கேற்ற கலவிலையும் படைத்திருக்கின்றனர். அருந்திறல்வாய்ந்த[illegible]சிரியரென்று கூறப்படுவாரெ[illegible] இவ்விளைஞர்களைக் குறித்[illegible]வே உணர்வாராக கின்[illegible]ர்கட்கு முன்புள்ள [illegible]ண்டில் வாழ்கின்ற [illegible]ள் கட்டுப்பாடுடை [illegible] அம்மக்களின் [illegible] இடையறவுழைப்பினர், வழிபட்ட எல்லாத் தடைகளையும் கடந்து தாமே தம் வழியிற் சென்று முன்னேறியவர்களாவர்.

இனி, அறிவுவிளக்கம் பெருத காலத்திலிருந்த ஆசிரியர்களெல்லாரும் மிகத் தெளிவில்லாத இடத்தில் அவ்வறிவு வெளியைச் சிறிது சிறிதாகப் பெருக்கிக் கொள்ளுதற்கு அலைந்து திரிந்தனர், திரிந்தும், அஃது எதிர்பாராது விளைத்தாலன்றிப் பயன் தருவதாயில்லை. ஆனால் அதற்கு மாறாக இக்காலத்தில் மேற்கூறிய நிலைகளுக்கிடையில், கண்டறிய முடியாத ஒரு குழு காணப்பட்டிருக்கின்றது. அதனுட் செல்லும் ஓர் இளைஞன் மிகப் பெரியதும் தெளிவுடையதுமான நல்லிடத்தினையடைகின்ருன்.

நிற்க, மெய்ந்நெறி தெரியாத ஒருவர் தம்முடைய சிறிய அறிவொளி கொண்டு, ஆய்வோர் செல்லும் இருள் நெறியை விளக்குகின்ருர். அது மிகவும் பையப்பைய முன்னேறுவதாகும். எனவே, அவரை எதிர் பார்க்க வேண்டாம், என்று இருள் புலர்ந்து நற்பகல் தோன்றி விட்டது. மீண்டும் நம் அறைக் கதவுகளை மூடிவைக்க வேண்டுவதில்லையென்க.

மக்கள், நல்லோர் குழுவில் தங்கள் நீத்தகவுடைய ஊனைப் பேச்சுக்களைப் பயன்படுத்துவதில்லை, அது முறைமையன்றாகலான். ஆனால் இன்றைய நிலையில் சிறந்த எழுத்தாளர்களைக் கொண்டுள்ள செருமானி நாட்டில் அக்கூற்றுக்கு மாருக, அவ்வகை எழுத்தாளர்கள் இலரென ஒருவர் மறுத்துரைப்பராயின் அவன் மிகவும் நகையாடத் தக்கவராதல் வேண்டும். இதனை யுணர்ந்து கொள்ளற்கு ஒருவன் புனைவு நூல்களைத் தேடவேண்டுவதில்லை; சிற்சில பொருள் குறித்துச் செல்விதாக எழுதப்பட்ட கட்டுரைகளை நாடவேண்டுவதில்லை. ஆராய்ச்சித் தாள்களும், ஏனை வெளியீடுகளும் மிக ஒழுங்கான உயரிய நடையில் எழுதப்படுகின்றன. அவற்றைப் பார்த்திடட்டும்; அவையே போதிய சான்றுகளாம். நாடோறும் செருமானியர்கள் பலவேறு உண்மைகளை மேன்மேலும் கண்டு உயர்நிலையடைகின்றனர். அதனுடன் நிற்பதில்லை, அவை மிக உ[illegible]ாகவும் நன்கு தெளிவு படுத்தப்[illegible]றன. இவைகட்கு எதிராகப் பலநிறத்திலும் எழுதப்படும் மறுப்புரைகளால், தமது இண்ணறிவின் திறனை மேன்மேலும் வளர்த்துக் கொள்ளுகின்றனர். எனவே, அவற்றால் வரும் பயன்களையும் அவர்கள் இழக்கவில்லை. இன்னும், பலவேறு அறிஞர்கள் உழைத்தும் வருந்தியும் இழைத்த நடைத் திறங்களைப் பற்றிய பல வேறு குறிப்புக்கள் இருக்கின்றன. ஒரு நல் இளைஞன் அந்நடைத்திறங்களை அடைதற்கென்று தானுக முயலாமல், தெளிந்த நடையினையும், தக்க ஒழுக்க முறைகளையும் எளிதிலடையுமாறு இவைகளை செய்து விடுகின்றன. இன்றைய நிலையில் நன்மையும் தூய்மையும் ஒருங்கு உணர்ந்த ஒரு நன்னெஞ்சத்தினர் செருமானிய நாட்டின் எழுத்தாளர்களைச் சிறிய நிலையில் வைத்துக் காணுகின்ருர், அவர்கள்மீது இழிவாகச் சிலர் கூறும் பழிப்புரையால் பொதுமக்களும் கலங்கி விடமாட்டார்கள் என்றே நம்புகிறோம். இங்ஙனம் கேடுசூழும் ஒருவர் மக்கட் குழுவினின்று ஒதுக்கப்படுதல் வேண்டும். முன்னேறிச் செல்லும் எழுத்தாளர்களெவரும் அவர் ஒருவரால் உளத்திட்பமிழக்கிருர்கள்; இங்ஙனந் தக்க பொதுமக்களனைவரும் மதிப்பிழக்கின்றனர்; நடுநிலைபோர் யாவரும் நகைப்பிணையையும், புறக்கணிப்பும் கொள்வாராயினர். எனவே இத் தீமைகளினின்றும் ஒவ்வொருவரும் விடுதலையடைய வேண்டும்.

—செந்தமிழ்ச் செல்வி

முதலியார் இராசநாயகமவர்கள்

வெள்ளவத்தை திரு. குல. சபாநாதன் அவர்கள்

(முற்றொடர்)

தமிழர்கள் இத்துறையிற் கவனஞ் செலுத்தாமை குறித்து முதலியார் அவர்கள் மனம் வருந்தியதையும் யானறிவேன். இத்துறையில இனிமேல் தமிழருக்காக உழைப்பதற்கு ஒரு தமிழன் முன்வருவானே? அரசாங்கமே பணம் வருத்துவைத்தும் தமிழர்களுடைய வணக்கக் குறைவாலும் முதலியார் அவர்கள் பாடுபட்டதுபோல இன்னுஞ் சிலர் பாடுபட்டுழையாமையாலும் தமிழர் தம் பொருட் செலவின்றி ஆராய்ச்சி செய்வதற்குரிய நூல்நிலையங்கள் கொழும்பிலுமில்லை. யாழ்ப்பாணத்திலுமில்லை. இனியாவது தமிழர்கள் இதனைச் சிறிதளவு சிந்திப்பார்களா?

மேலும் முதலியார் அவர்கள் பழைய நாணயங்கள் சேர்ப்பதிலும் ஊக்கமெடுத்து வந்தார்கள். 'சேது' எனுஞ் சொல் பொறிக்கப்பட்ட காசு யாழ்ப்பாணத்தரசர்களுடையதாயிருக்கக் கூடும் என முதலியார் இராசநாயகம் அவர்கள் முதன் முதற் குறிப்பிட்டதாகவும், தாம் பின்றொடர்ந்து ஆராய்ந்து பல உண்மைகளைக் கண்டதோடு முதலியார் அவர்கள் குறிப்பிட்டமை உண்மையெனக் கண்டதாகவும் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ருர்கள். (Ceylon Antiquary vol V. Part IV) யாழ்ப்பாணத்தரசர் நாணயங்களிற் காணப்பட்ட சின்னங்களையே முதலியார் அவர்களும் கடிதமெழுதும் தாள்களில் பொறித்து வைத்திருந்தார்கள்.

முதலியார் அவர்கள் கொழும்பிலிருந்தமையால் ஆகாயவசனி ஆலோசனைக் குழுவின் அங்கத்தவராயிருந்து தமிழ்ப் பகுதியில் சிறந்த விஷயங்களை ஒலிபரப்புவதற்குக் காரணராயினர். சபைகளில் வந்து பாடவிருப்பமற்றிருந்த சைவ மங்கையர் பலருக்குப் புத்திமதிகூறி ஒலிபரப்பிடத்திற்கேனும் சென்று சங்கீத விருந்தளிக்குமாறு தூண்டிவிட்ட பெரியாரும் இவரே. இத்துறையில் தமிழர்கட்காக முதன் முதல் உழைக்க முயன்றவர் இவராதலின் இவருடைய பணியைப் போற்ருதிருக்க முடியுமா?

முதலியார் அவர்கள் யாழ்ப்பாண ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்திலும் மிகுந்த ஊக்கங்காட்டி வந்தார்கள். யாழ்ப்பாணச் சரித்திரத்தைக் கற்கும் மாணவர்களை ஊக்கப்படுத்தக் கருதி இச்சங்கத்தாரால் நடாத்தப்பட்டு வந்த பரீட்சைகளுளொன்ருய பாலபண்டித பரீட்சைக்குரிய பாடங்களுள் ஒன்ருகவிருந்த யாழ்ப்பாணச் சரித்திரத்தில் முதலாவதாகத் தேறும் மாணவருக்கு ஆண்டுதோறும் பரிசளித்து வந்தார்கள். இத்தொண்டையே இன்னுஞ் சிறந்த முறையில் முதலியார் அவர்களின் பெயரால் ஆண்டுதோறும் ஒரு பரிசுத் தொகையாக வழங்குவதற்கு அவர் மக்கள் ஏற்பாடு செய்வார்களென்று நம்புகிறேன்.

தமிழ் நூல்களை வெளியிடுபவர்களுக்கு வேண்டிய பணவுதவியைப் பன்முறை செய்திருக்கின்றர்கள். கதிரைநான் மணிமாலை இவருடைய பொருளுதவியால் வெளிவந்துள்ளது. இவ்வறிஞரைத் தலைவராகக் கொண்ட அறிஞர் அவைக்களத்துத் தான் கதிர்காமப் பிள்ளைத் தமிழ் எனுஞ் சிறந்த தனித் தமிழ் நூல் அரங்கேற்றப்பட்டது. முதலியார் அவர்கள் தாம் உடல் நலங் குன்றியிருந்த காலத்தும் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் வெளியிடும் அகராதி முற்றும் வெளிவர வேண்டுமெனப் பணஞ் சேகரித்தனுப்ப முயன்றனர்.

கொழும்பிலேயுள்ள சைவப்பெண் பாலர்க்கு ஒரு சைவப் பள்ளிக்கூடம் நிறுவ வேண்டுமெனச் சைவ மங்கையர் கழகத்தைத் தூண்டிவிட்டவர் இவரே. ஸ்ரீமதி சதாசிவம் மிகவும் பாடுபட்டுழைத்ததால் நிறுவப்பட்ட பாடசாலை இப்பொழுது சிறப்பாக நடைபெற்று வருகின்றதென்பதனை மகிழ்ச்சியோடு தெரிவிக்கின்றேன். எந்தச் சிறு விஷயத்திற்கும் இக்கழகம் முதலியார் அவர்களிடமே புத்தி கேட்கச் செல்வது வழக்கம்.

முதலியார் அவர்கள் புன்முறுவல் பூத்த முகத்துடன் எவரைக் கண்டாலும் ஆறுதலாகப் பேசுமியல்பினராதலின் அவர் வீட்டில் எப்பொழுதும் மாணவர்கட்கும் புலவர்கட்கும் குறைவில்லை. ஒரு முறை கண்டு பேசியவர் மீட்டும் மீட்டும் அவருடன் அளவளாவியின்புறவே விரும்புவர். உலகத்தில் சிலரைக் காண்பதற்குக் குறித்த நேரத்தில் போக வேண்டும். ஆனல் முதலியார் அவர்கள் விஷயத்தில் இந்த இடுக்கண் கிடையாது. எவரும் போய் ஆனந்தமாக விருந்து அவருடைய அறிவுரைகளைக் கேட்டு மகிழலாம். சிவில் சேவின் பதவியிலிருந்து இளைப்பாறிய ஒருவரைக் காண[illegible] தன்முன் [illegible] எத்தனையோ தடைகளைத் தாண்டிச் செல்ல வேண்டும், சில சமயங்களில் காணமுடியாமலும் போகக் கூடும். ஆனல் முதலியார் அவர்களோடு அத்தகைய சிந்தனையொன்றுமின்றி எவ்வளவு நேரமும் பேசிக் கொண்டிருக்கலாம். இவருடைய பொறுமையைப் பலமுறை கண்டு வியக்க நேர்ந்தது. பண்டிதர் கே. வை. செல்லையா அவர்களைப் பெரும்பாலும் முதலியார் அவர்கள் வீட்டிலே காணலாம். பண்டிதர் அவர்கள் பல வகைகளிலும் முதலியார் அவர்களுக்கு உதவிபுரிந்து வந்திருக்கின்ருர்கள். அங்ஙனமே முதலியார் அவர்களும் இவர்மீது மிக்க பேரன்பு வைத்திருந்தார். நம் நண்பர் வெள்ளவத்தை மு. இராமலிங்கம் அவர்களும் அடிக்கடி வருவார். பல ஐயங்களை அவரிடம் கேட்டுத் தீர்த்துக் கொள்வார். ரோயல் கல்லூரி ஆசிரியர் இராமலிங்கம் அவர்களும் அடிக்கடி வந்து நகைச்சுவை ததும்பப் பேசிக்கொண்டிருப்பார். முதலியார் அவர்கள் சிறு பிள்ளையைப் போல நகைக்கதைகளும் இடையிடையேபேசி மகிழ்வித்துக்கொண்டிருப்பர். அவர்களுடைய முகத்தில் இதுவரை சிறிதளவுக்காவது கோபம் தோன்றியதை யான்கண்டிலேன். கோபம் என்பது இன்னதென முதலியார் அவர்களும் அறிந்திருக்கவில்லையென்றே கருதுகின்றேன்.

கடந்த சில வருடங்களாகச் சரித்திர சம்பந்தமான பல விஷயங்களையறியும் நோக்கமாக முதலியார் அவர்கள் வீட்டுக்குப் பலமுறை போவது அடியேனது வழக்கம். இப்பெரியாருடைய ஊக்கத்தால் சரித்திரம் சிறிது கற்கத் தொடங்கி வரும் பொழுதே எமக்குக் கிடைத்த ஊன்றுகோல் இறைவனால் பறிக்கப்பட்டதையிட்டு வருந்தாமலிருக்க முடியுமோ? ஈழமண்டலப் புலவர் வரலாற்றுக் குறிப்புக்களை அடிக்கடி எழுதி அனுப்பிக் கொண்டிருப்பார்கள். பலருக்குத் தாமாகவே கடிதங்கள் எழுதிக் குறிப்புக்களை வரவழைத்து எமக்குதவியிருக்கின்ருர்கள். இறப்பதற்கு முந்திய வாரமும் ஒரு புலவரைப் பற்றிக் குறிப்புக்கள் அனுப்பும்படி கடிதம் எழுதியிருந்தாரெனப் பின்னர் அறிந்தேன். கடந்த கிறிஸ்மஸ் நாட்களில் முதலியார் அவர்களுடைய உதவியால் திரிகோணமலையிற் சில பழைய நூல்களையும் ஏடுகளையும் பார்க்கும் அரிய சந்தர்ப்பம் கிடைத்தது. அடியேன் இரண்டு நாட்களமட்டுமே தங்க வசதிப்பட்டமையால் இன்னொரு

தொடர்ச்சி 3-ம் பக்கம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: பிரமாதி ௵
தைமீ உகூ வியாழக்கிழமை

மிஸ்ரர் கொறியா கொண்ட மேலானநோக்கம்

கைத்தொழில் வாணிபம் முதலிய முயற்சிப் பகுதிக்குரிய மந்திரியாகிய மிஸ்ரர் G. C. S. கொறியா சென்றவாரம்யாழ்ப்பாணத்திற்கு வந்து தமிழரையுஞ் சிங்களரையும் சிறிதும் பிரிவினை யின்றித் தொன்மைபோல ஐக்கியப்படுத்தி இந்நாட்டின்நலத்தை நாட்டவேண்டுமென்று முயற்சி செய்துள்ளார்; இங்குள்ள சனத்தலைவரென் றிருப்போர் சிலரைத் தாம் நேரிற் சென்று தம்முடைய மேலான நோக்கத்தை வெளியிட்டார். இங்குள்ள தமிழகத்தார்கட்கு அரசாங்க சபையிலே போதிய பிரதிநிதித்துவம் உதவ வேண்டுமென்பதும் அப்படி உதவினால் தமிழ் மக்கள் இலங்கை மகாசபையினருடன் ஒத்துழைத்தலாகு மென்பதும் மிஸ்ரர் கொறியா கொண்டுள்ள சிறந்த கொள்கைகளாகும். தமது நோக்கங்களை அவர் இங்குள்ள சனத் தலைவர்கட்கு வெளியிட்டபோது இவர்களும் அதற்கு உடன்பட்டவர்களாய், சிங்களத் தலைவர்களென இப்பொழுதிருக்கும் ஸேர். பரன் ஜயத்திலகை, மிஸ்ரர் D. S. சனநாயக முதலியவர்கள் தமிழர் வாழும் மாகாணங்களாகிய வடமாகாணம் கிழ் மாகாணம் இரண்டிற்கும் போதிய பிரதிநிதித்துவம் உதவுவதாக வாக்களித்தல் வேண்டுமெனக்கேட்டார்கள். இந்த இரு மாகாணங்களும் தலைநகராகிய கொழும்பிலிருந்து அதிக தூரத்துள்ளன. ஆதலாலும் இவைகள் சீர்திருந்தாத நிலைமையில் இருப்பதாலும் இம்மாகாணவாசிகட்குப் போதிய பிரதிநிதித்துவம் அளித்தல்வேண்டுமென்று நியாயங் காட்டினர். தமிழ்ச் சனத் தலைவர்களும் சிங்கள மகாநாட்டுப் பிரதிநிதிகள் சிலரும் இந்தப் பிப்ரவரி மாசம் முடிவதற்கிடையில் இவ்விஷயமாக யோசிப்பரென அறியக் கிடக்கின்றது.

மிஸ்ரர் கொறியா கொண்ட நோக்கம் நிறைவேறு மானால் இலங்கை மக்களுக்கு நல்ல காலம் பிறக்கு மென்பது நிசம்; சிங்களருள்ளும் தமிழருள்ளும் ஐக்கியத்தைக் கெடுத்துச் சாதி வித்தியாசத்தை உண்டாக்கிப் பல அனர்த்தங்களை விளைவிப்போரும் இருக்கின்றார்கள் என்பது நிசம்; இப்படிப் பட்டவர்கள் காரணமாகத் தான் இலங்கையின் பிரதான சாதியினராகிய சிங்கள தமிழர்கட் கிடையில் முன்னிருந்த ஐக்கியந் தேய்ந்து பெரும் பகை விளையலாயிற்று. சிங்களரைப் புறக்கணித்துத் தமிழரும் தமிழரைப் புறக்கணித்துச் சிங்களரும் நல்லாய் வாழுதல் அசாத்திய மெனலாம். இந்த நேரத்தில் இந்த விஷயமாக, முதல் தமிழர்கள் தங்களுக்கிடையேயுள்ள அபிப்பிராய பேதங்களையும் பிணக்குகளையும் ஒருவரையொருவர் குறை சொல்லுவதையும் அறவே யொழித்து விடல் வேண்டும்; அப்படியே சிங்களருஞ் செய்து கொண்ட பின் இரு சாதியாரும் ஐக்கியப் பட்டு இந்த நாட்டின் ஈடேற்றத்தின் பொருட்டு உழைப்பார்களானல் இந்நாடு காலகதியிற் பொன்னடாகும்.

இவ்வளவோடு மாத்திரம் நின்று விடாமல், சிங்களர் எங்களுக்குந் தங்களுக்குந் தாய் நாடாகவுள்ள இந்தியாவையும் இந்தியரையும் புறக்கணித்தலாகிய தீய செயலையும் அறவே தவிர்த்துவிடல் வேண்டும். சிங்களர் இந்தியரைப் புறக்கணிக்கத் தலைப்பட்டமையினால் அச் சிங்களரைக் காட்டிலும் தமிழர்களாகிய நாங்களே இப்பொழுது பெரிதும் பஞ்சப்படலானேம். இரு சாதியாரும் ஐக்கியப் படும்போது மேலே சொல்லப்பட்ட குறைகளனைத்தையும் விபரீதங்கள் முழுவதையும் அறவே ஒழித்துக் கொண்டு நிலையான ஐக்கியம் இரு சாதியாருக்கு மிடையே நீடித்த காலம் நடைபெறக் கூடியதாய் ஐக்கியப் படுவ ரெனக் காத்திருக்கின்றோம்.

அடித்துப் பணம் பறித்ததாக வழக்கு

1-ம் எதிரிக்கு 6 வாரமும் 2-ம் எதிரிக்கு 6 மாதமும் மறியற்றண்டனை

யாழ்ப்பாணம் 7-2-40

நல்லூரில் வசிக்கும் சின்னப்பா-சதாசிவமும் மாணிக்கம் அப்பாத்துரையுமாக மீசாலையில் வசிக்கும் துரைசாமி ஐயர்-கனகசபாபதி ஐயரின் காசு ரூபா 25-ஐ அடித்துப் பறித்ததுமல்லாமல், இரண்டாம் எதிரி மேற்கூறியவருக்குக் காயம் விளைத்ததாயும் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு விசாரணையின்பின், நீதிபதி எதிரிகளைக் குற்றவாளியெனக் கண்டு முதலாம் எதிரிக்கு ஆறுகிழமை மறியற்றண்டனையும் இரண்டாம்எதிரிக்கு ஆறுமாத மறியற்றண்டனையும் விதித்தார்.

வழக்கின் சாராம்சமாவது:- துரைசாமி ஐயர்-கனகசபாபதிஐயர் 1939ம் ஆண்டு டிசம்பர் மாதம் 4ந்திகதி பிற்பகல் செட்டிவீடொன்றில் "அடைவு வைத்த நகையொன்றைமீட்டு அதனை விற்றகாசில் எழுபது சதத்தைச் செலவு செய்தபின்னர், ரூபா 27-80 சதத்தையும் ஒரு கொட்டைப்பெட்டிக்குள் வைத்துக்கொண்டு நல்லூரிலிருந்து கச்சேரிக்குப் போகும் றோட்டால் பொன்னுத்துரை யென்பவருடைய வீட்டுப் படலையடியிற் சென்றபோது மேற்கூறிய இரண்டு எதிரிகளையும் சந்தித்தார். அப்போது முதலாம்எதிரி "நில்லடா, உனது மடியிற் காசுஇருக்கிறதா" வென்று சொல்லிவிட்டுக் கனகசபாபதி ஐயரின் பிடரியிற் கையால் அடித்தார். பின்னர் மடியிற் பிடித்தார், இதற்கிடையில், இரண்டாம் எதிரி பக்கத்தேயுள்ள வேலியில் தடிமுறிக்கச் சென்றார். இவர் தடியோடு வருவதற்கு முன் முதலாம் எதிரி ஐயரின் கொட்டைப்பெட்டியை எடுத்து அதற்குள்ளிருந்த மூன்று பெரிய நோட்டுக்கள் கொண்ட மடிப்பை எடுத்துக்கொண்டு மிகுதிப்பணத்தோடு கொட்டைப்பெட்டியை நிலத்திற்போட்டுவிட்டுச் சென்றுவிட்டார். இரண்டாம் எதிரி தடியால் ஐயரின் இடது நெற்றியில் அடித்தார். அந்த நேரத்தில் ஐயருக்கு இரண்டாம் எதிரியைத் தெரியாது. இவர்கள் ஐயருக்கு இப்படிச் செய்வதற்கு ஒருவகையான நியாயமு மிருந்திருக்கவில்லை. ஐயருக்கும் பொன்னையாவென்னுமொருவருக்கும் ஒரு பெண்ணைப்பற்றிய தொந்தரவு இச்சம்பவம் நடப்பதற்குச் சில நாட்களுக்கு முன்இருந்தது. ஐயர் தனது காசை அடித்துப் பறித்ததைப்பற்றித் தனது மாமனாருக்கும் பொன்னுத்துரைக்கும் விதானையாருக்கும் அறிவித்திருந்தார். ந. நி.

சடுதி மரணம்

இரத்தக் குழாய்கள் உரோஞ்சுப்பட்டமையால் நிகழ்ந்ததாகத் தீர்ப்பு

7-2-40

வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியிற் சயிக்கிள்கடை வைத்திருக்கும் பொன்னையா கனகரத்தினமென்பவருடைய கடையில் நின்ற 25 வயதுடைய இந்திய வாலிபனுகிய பழனியாண்டி-முத்துச்சாமி என்பவன் நேற்றுக்காலை சடுதியாக மரணமடைந்ததாக ஓர் அறிவித்தல் யாழ்ப்பாணம் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிசார் இடத்திற்குச் சென்று விசாரணை செய்தனர். மரண விசாரணையில் இறந்தவனின் இரத்தக்குழாய்கள் ஒன்றோடொன்று உரோஞ்சுப்பட்டமையால் மரணம் ஏற்பட்டிருக்கக் கூடுமென அபிப்பிராயம் கூறப்பட்டது.

இறந்தவன் காலையில் கனகரத்தினத்தின் வீட்டில் நின்று கடைக்குச் சென்றதாயும் திரும்ப வீட்டுக்குச் சென்று பிட்டும் கோப்பியும் சாப்பிட்டதாயும் பின்னர் வாந்தி எடுத்துச் சத்தி எடுத்ததாயும் களைப்பு மிகுதியால் யாதும் பேசாது கிடந்ததாயும் மற்றவர்கள் அவனை டாக்குத்தர் சுப்பிரமணியம் வீட்டுக்குக் கொண்டு சென்றதாயும் அங்கே அவர் அவன் பிரேதமாகக் கிடந்தமையைக் கண்டு அவர்களைக் கொண்டு போகும்படிகூறி அனுப்பினதாகவும் அறிகிறோம். ந-நி

சங்கரத்தையில் தற்கொலை

தீப்பற்றியவீட்டுக்குள் மாதின் பிரேதம்

சென்ற திங்கட்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிபதிக்குச் சங்கரத்தையில் வசிக்கும் ஐம்பது வயதுடைய செல்லையா கைம்பெண் அன்னப்பிள்ளை யென்பவர் தமது வீட்டு அறையில் இறந்து கிடந்ததாயும் இவ்வீட்டு அறை உள்ளுக்குப் பூட்டப்பட்டிருந்ததாயும் வீட்டில் நெருப்புப்பற்றி வீடு எரிந்து விட்டதாயும் ஒருதகவல் அறிவிக்கப்பட்டது. நீதிபதியும் யாழ்ப்பாணம் பொலிஸ் இன்ஸ்பெக்டரும் அந்த இடத்துக்குச் சென்று பார்வையிட்டனர். பின்னர் டாக்குத்தர்சென்றுசோதனை செய்தார். மரணவிசாரணை செய்த பின்னர்த் தற்கொலையென்றே கூறப்பட்டதாகவறிகிறோம்.

மேற்படி பெண்ணுக்குப் பிள்ளைகளில்லையென்றும் அவளுடைய சொத்துக்களை இனத்தவர்கள் தங்கட்கு மாற்றியெழுதி வைக்கும்படி வற்புறுத்தியதாயும் இதனையிட்டு அவவுக்குத் தொல்லைகள் அதிகரித்திருந்ததாயும் இவற்றைப் பொறுக்க முடியாமலே அப்பெண் கொலைசெய்யும் நோக்கமாகத் தனது படுக்கையைச் சுற்றித் துணிகளைப் போட்டு மண்ணெண்ணெயையும் ஊற்றி நெருப்பு மூட்டிக் கொண்டதாகவும் கூறப்படுகிறது. ந நி

கொக்குவிலில் கத்திக்குத்து

எதிரிமீதுவாறண்ட் பிறப்பிக்கப்பட்டது

கொக்குவிலில் வசிக்கும் சரவணமுத்து-நடராசா வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியில் சபாபதி தர்மலிங்கத்திற்கும் வயிரமுத்து-கந்தவேலுவுக்கும் கத்தியாற் குத்திக் காயம் வருவித்ததாகக் குற்றஞ் சாட்டி யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிபதி முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி எதிரிக்கு வாறண்டு விட்டு வழக்கை வருகிற 14-2-40 ந் திகதிக்கு விசாரணைக்குத் தவணையிட்டார். ந. நி.

சீதாரியில்திருட்டு

எதிரிக்கு ஆறுமாதம்

சீதாரியிலுள்ள பிச்றேட்டில் வசிக்கும் டி.எம். லீலாவதி யென்பவளுடைய வீட்டுக்கதவைப் பலவந்தமாகத் திறந்து கிட்டத்தட்ட ரூபா 250 பெறுமதியான நகைகளையும் மணிக்கூட்டையும், காசையும் களவெடுத்ததாக இருபத்தைந்து வயதுடைய சிங்கள வாலிபன் மடவேல-காரானகே-மேன்டில் அல்லது சிங்கள மல்லி அல்லது மாட்டின் என்பவன்மீது யாழ்ப்பாணம் பொலிஸ் உதவி இன்ஸ்பெக்டர் ஏ. எப். கல்டேற ஒரு வழக்கைப்பொலிஸ் நீதிபதி முன்னிலையில் தொடர்ந்தார். இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு விசாரணையின்பின் நீதிபதி எதிரிக்கு ஆறுமாதக் கடுழிய மறியற்றண்டனை விதித்தார். ந. நி.

கையொடுபட்ட சயிக்கிள் திருடன்

எதிரிக்கு6மாதக் கடுழியமறியல்

வட்டுக்கோட்டையில் வசிக்கும் நல்லதம்பி-கந்தசாமி கரையூரில் வசிக்கும் R. பிரசாதம் என்பவருடைய ரூபா 15 பெறுமதியான 8239ம் இலக்கச் சயிக்கிளைப் பெரியகடைமார்க்கட்டுக்குவெளியேயிருந்து களவாக எடுத்துக்கொண்டு ஓடியபோது பொலிஸ்காரர் கண்டு பிடித்து அவன்மீது வழக்குத் தொடர்ந்தனர். எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டான். நீதிபதி எதிரிக்கு ஆறு மாதக் கடுழிய மறியல் தண்டனை விதித்தார். ந. நி.

விவாகம்

தர்மலிங்கம்பிள்ளை—
மங்கையர்க்கரசி

நிகழும் தை மீ 22௳ (4-2-40) யன்று காலை 7-30 மணிக்குமேலுள்ள கும்பலக்கின சுபமுகூர்த்தத்தில் பருத்தையம்பதியைச் சேர்ந்தவரும் தற்போது ரங்கூன் சாட்டட் வங்கியில் உத்தியோகம் பார்ப்பவருமாகிய திருவளர் செல்வன் மா. தர்மலிங்கம்பிள்ளை அவர்களுக்கும், வல்வையம்பதியைச் சேர்ந்தவரும் தற்பொழுது மெக்டிலா ஸ்ரேஷன் மாஸ்றராக இருப்பவருமாகிய திரு. வி. வே. சிவசம்புப்பிள்ளையின் புதல்வி திருவளர் செல்வி மங்கையர்க்கரசி அம்மாளுக்கும் விவாகம் சிறப்பாக நடைபெற்றது.

மணமக்கள் சகல செல்வமும் பெற்று நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

யாழ்ப்பாணத் தலைவர்களுடன் தொழில்மந்திரி பேட்டி

இலங்கைத் தேசியக் காங்கிரசுடன் ஒத்துழைக்கநிபந்தனைகள் பற்றி விவாதம்

யாழ்ப்பாணம், பெப், 4

தொழில் வர்த்தக மந்திரி திரு. ஜி. ஸி. எஸ். கொரியா நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். பிற்பகலில் அவர் ஏறக்குறைய 2½ மணி நேரமாகப் பிரபல தமிழ்த்தலைவர்கள் சிலரைச் சந்தித்துப் பேசினார். இலங்கைத் தேசியக் காங்கிரஸுக்கும் தமிழர்களுக்குமிடையே ஐக்கியமான மேற்படுவதற்குண்டான வழிவகைகளைப் பற்றிப் பரிசீலனை செய்வதைக் குறித்தே மந்திரி அத் தலைவர்களுடன் கலந்து ஆலோசித்தார்.

காங்கிரஸுடன் தமிழர்கள் ஒத்துழைப்பதற்கு அரசாங்கசபையில் தமிழர்களுக்கென்று குறைந்த பட்சம் எத்தனை ஸ்தானங்கள் வழங்கப்படவேண்டும் என்பது பற்றியே பிரதானமாக விவாதிக்கப்பட்டது. தமிழர் தலைவர்களிற் பெரும்பான்மையோர் வகுப்புவாதத்தை எதிர்க்கிறார்கள். வடமாகாணமும் கிழ் மாகாணமும் அரசாங்கத்தின் தலைநகரிலிருந்து வெகு தூரத்திலிருப்பதாலும், அவைகளின் பிற்போக்கான நிலைமையை முன்னிட்டும், குறித்த இரு மாகாணங்களுக்கும் அரசாங்கசபையில் அதிகப்படியான பிரதிநிதித்துவம் அளிப்பதாக ஒப்புக்கொண்டு ஸேர். பரன் ஜயத்திலகாவும், திரு. கொரியாவும், திரு. டி. எஸ். சேனநாயகாவும், பகிரங்கமாக அறிக்கைகள் விடுக்கவேண்டுமென்றே அத் தமிழர் தலைவர்கள் வற்புறுத்துகின்றார்கள். அவ்விதமான ஒரு பகிரங்க அறிக்கை விடுக்கப்பட்டால், தமிழர்கள் சிங்களவர்களுடன் ஒத்துழைப்பதோடு பெரும்பான்மையோர் தேசியக் காங்கிரஸிலும் சேர்ந்துகொள்ளக்கூடுமென்று கூறப்படுகின்றது.

இந்த மாதம் முடிவதற்குள் யாழ்ப்பாணத்தி[illegible]மிழர் தலைவர்களுக்கும் சிங்கள[illegible]ப் பிரதிநிதிகளுக்குமிடையே ஒரு[illegible]டு மகாநாடு நடைபெறலாமென்று நம்[illegible]கிறது.

பிரமச்சாரி மந்திரியின் மண உத்தேசம்

பட்டினசபைகள்சங்க மகாநாட்டில் வெளிவந்த விஷயம்

அரசியற்றுறையில் பெண்களுக்கு அதிகப்பங்கு அளிக்க ஆர்வம்

வெள்ளிக்கிழமையன்று குருநாகலையில் நடைபெற்ற பட்டினசபைகள் சங்க மகாநாட்டிற் சமூகமளித்திருந்த பிரதிநிதிகளுக்குச் சிற்றுண்டி விருந்து அளிக்கப்பட்டபொழுது பிரமச்சாரியான சுயதல ஆட்சிப் பகுதி மந்திரி திரு. எஸ். டப்ளியூ. ஆர். டி. பண்டாரநாயகா சிறு சொற்பொழிவு நிகழ்த்தினர். அரசியல் வட்டாரங்களிற் பெண்கள் பங்கெடுத்துக் கொள்வதினால், [illegible] அபிப்பிராயம் இருந்துவருவது தவறென்றும், அவர்கள் ஆண்களைவிட அதிகமாகப் பேசக்கூடியவர்களென்று கருதப்படுவதால், அரசியல் வாதிகளான ஆடவர்கள் தாங்கள் பேசவேண்டியதிற் பெரும் பகுதியை ஸ்திரீகளுக்கு விட்டு விடலாமென்றும், ஆதலால் அவர்களை அரசியல் வட்டாரங்களில் வரவேற்கவேண்டுமென்றும் கூறினர். மேலும் தாமும் தம்முடைய பிரமச்சரிய வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்வதில் அதிக கவனஞ் செலுத்தி வருவதாகவும், தற்கால நாகரிக முறையை அனுஷ்டித்துத் தாம்நடந்துகொள்ளப் போவதாகவும் குறிப்பிட்டார்.

ஆகவே, இதிலிருந்து 41 வயதுள்ள பிரமச்சாரி மந்திரி திரு. பண்டாரநாயகா தமது பிரமச்சரிய விரதத்தை உதறி எறிந்துவிட்டுச் சதிபதி சகிதமாகும்பொருட்டு மணஞ்செய்ய உத்தேசித்திருக்கிறாரென்று வெளிப்படுகிறது என மகாநாட்டுக்கு வந்திருந்தவர்கள் அபிப்பிராயப்படுகின்றனரெனத் தெரிகிறது.

விற்பனைக்கு

அரியாலை கிழக்கில் 240 ஏக்கர் தென்னந் தோட்டமும் வெட்டுக்காட்டில் 63 ஏக்கர் நிலம் தென்னந் தோட்டமும், சொந்தக்காரர் ஸ்ரீமதி C. சிற்றம்பலம் வேண்டியோர் [illegible] விலாசத்துக்கு எழுதிக் கொள்[illegible]

C[illegible]
C/o P[illegible]

M/s 265 8 & 12-2-[illegible]

உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்)

கிளாக்கர் கொண்ட கலக்கம்

கிளாக்கர் தம்முடைய மகளை அந்த நேரம் யோசியாமல் அந்நியருடன் அனுப்பினபோதும், சிறிது நேரஞ் செல்ல அவர் தாம் செய்த செயலையிட்டுப் பச்சாத்தாபப்படத் தொடங்கினர். "என்ன பேய்த்தனஞ் செய்துவிட்டேன்; எப்படியிருந்தாலும் என் அருமை மகளை, அதிலும்ஒருகுமரிப்பிள்ளையை, என் முன் பின் அறியாதவர்களுடன் நள்ளிரவிலே தக்க துணையின்றி அனுப்பி விட்டேனே; [illegible] ஒரு பிழையு வந்தால், இவ்வேளை வழியிலே [illegible] தான் ஒரு இடையூறு சம்பவித்தாற் செய்வதென்ன! தாய்க்கு என்ன மறுமொழி சொல்லுவது; என் என் புத்தி அந்த நேரத்தில் அப்படிச் சபலமடைந்தது! பெற்றதாய் இந்நேரம் உடன் இருந்தால் இப்படிச் செய்ய என்னை விட்டிருப்பளா? பெண்பிள்ளைகளை, அவர்களுள்ளுங் கன்னிப் பருவத்தினரைப் பிரியமாக இருந்தாலும் தாயைப் பிரித்துத் தனியே அழைத்துச் செல்வது பெரும் பிழையென்பதை, [illegible] என்றபடி இப்பொழுதுதான் நான் அறிகிறேன்; எங்களுடைய "கார்" தானே, சங்கரனும் செலுத்திக்கொண்டு கூடப் போகிறான்தானே, பெண்ணுடன் பிறந்தவனும் ஒருசதி உடன் போகின்றானே என்று நினைத்தல்லவா அந்த நேரம் என் பிள்ளையை நான் இராக்காலமென்றுஞ் சிந்தியாமல் அனுப்பிவிட்டேன்; அல்லாமலும் நான் என் அனுப்பப் பார்த்தல்லவா உடன் போகாமல் விட்டுவிட்டேன்; சற்று நேரம் நித்திரை விழித்திருக்கச் சிரமப்பட்டேன்; இப்பொழுது என் அருமை மகளை ஆன துணையின்றி அனுப்பிவிட்டு நீடித்த நேரம் நித்திரை விழித்து அவ்வளவோடு நில்லாமல் மனச் சஞ்சலப்படுகின்றேனே! காரணமில்லாமல் என் மனம் பதறுகின்றதே! என் பிள்ளைக்கு ஒரு பிழை நேருமானால் என் [illegible] ஆற்றிற் கடலிற் குதித்து உயிரை மாய்ப்பதேயொழிய வேறு ஏதுஞ் செய்யமுடியுமா! சரி, இப்பொழுது புறப்பட்டுப் போகலாமோ என்றால் என்ன விதமாகப் போவது! அவர்களுடைய காரை அந்தச் சாரதியைக் கொண்டு செலுத்துவித்துக் கொண்டு போனாலும், பாலசிங்கம் என்பவர் நான் ஏதோ அபிமான சந்தேகப்பட்டு இடையிற் புறப்பட்டு வந்துவிட்டேன் என்று என்னை விபரீதமாக நினைப்பாரே; தேடிப் போகாமல் விடலாமோ என்றால் மனம் பொறுக்கவில்லையே; ஐயோ, தெய்வமே! போகவும் முடியாமல் போகாமல் விடவும் முடியாமல் கட்டாற்றில் நின்று தியங்குகின்றேனே! இதுவும் உன் சோதனையா!

பிள்ளைப் பாசம் கொடிது! கொடிது!!

ஆ! நான் தான் போகச் சொன்னாலும், என் பிள்ளை "ஐயா! நீங்களும் வாருங்கள்; இல்லாவிட்டால் நான் போகமாட்டேன்" என்று சொல்லியிருந்தால் நான் நிச்சயமாகக் கூடிக்கொண்டு போயிருப்பேனே! என் அரிய மகளுக்கு ஏன் அந்த நேரத்தில் அப்படியான புத்தி வரவில்லை! பாவம், என் பிள்ளையை நான் குற்றஞ் சொல்லக்கூடாது; அவள் அந்தப்பெண்ணைத் தன் உடன்பிறப்பென்று மதித்துவிட்டாள்; இல்லாவிட்டால் என் பிள்ளை ஒரு போதும் போக உடன்பட்டிராள்; மேலும் தகப்பனுக்கு இல்லாத புத்தி பிள்ளைக்கு வருமா? இன்னுஞ் சற்று நேரஞ்செல்ல என் அருமையானபுதல்வி வந்துவிடுவாள் தானே என்று நான் என் மனத்திற்குச் சமாதானம் சொன்னாலும் மனங்கேளாதாமே! பிள்ளைப் பாசம் கொடிது! கொடிது!! இதையறியாமலா "கடந்துளோர்களுங் கடப்பரோ மக்கள்மேற் காதல்" என்று அந்தக் காலத்திலே பாடி வைத்தவர்கள்! சரி, இன்னும் இருந்து யோசித்து ஆவதென்ன! அடுத்த அறையிற்றானே பாலசிங்கத்துடன் வந்த "டிறைவர்" சாரதி படுத்து நித்திரை கொள்ளுகிறார்; அவருக்குப் படக்காட்சிச்சாலை இன்ன இடத்தில் என்பதும் தெரியும்; அவரைப் போய் எழுப்பி அவர்களுடைய காரை எடுப்பித்துக்கொண்டு புறப்பட்டுப் போவோம்; பாலசிங்கம் என்னைப்பற்றி எப்படி நினைத்தாலுஞ் சரி, என்று சொல்லிக் கொண்டு படுக்கையை விட்டெழுந்து போய் அடுத்தஅறையி[illegible] கதவைத் தட்டினர்; பதில் எது[illegible] இல்லை; "ஐயோ, அவருடைய [illegible]ரும் தெரியவில்லையே; டிறைவ[illegible] என்று கூப்பிட்டால், அவர் [illegible] கோபிப்பரோ" என்று பயந்தனரேனும், ஆபத்திற்குப் பாவமில்லையென்று நினைத்துக்கொண்டு "டிறைவர்! டிறைவர், ஐயோ! நித்திரையோ" என்று கூப்பிட்டுக்கொண்டு கதவிலும் தட்டினர்; உள்ளே கிடந்த "டிறைவர்" விழித்துக்கொண்டு "ஆரது" என்றுகேட்டதும் "அது நான் தான், கிளாக்கர்" என்று சொல்ல "ஐயாவா! என்ன ஐயா அவர்கள் இன்னும் வரவில்லையோ" என்று கேட்டுக்கொண்டு கதவைத் திறந்து எழுந்து வந்து வாசலில் நின்றான்; கிளாக்கர் அவனை உற்றுப் பார்த்தார்; அவனுடைய தோற்றமும் நடையும் வினயமும் இவன் [illegible] சாதியாக வந்தவனல்லன் என்பதையும், இவன் அவனைக்காட்டிலும் நல்ல குணமுடையவனென்பதையும் குலம் குடியிற் பிறந்தவனென்பதையும் கிளாக்கருக்குப்புலப்படுத்தியன. கிளாக்கர் அவனைப் பார்த்து "தம்பி, போனவர்கள் இன்னமும் வரக் காணேனே; படக்காட்சி முடிவதற்கு இன்னும் அதிக நேரஞ் செல்லுமோ" என்று கேட்க அவன் "ஐயா; இப்பொழுது நேரம் என்ன? 12 மணிவரையில இருக்குமா?" எனலும் "ஆம். 12 மணி வரையிற்றான் இருக்கும்" என்று கிளாக்கர் சொல்ல, "இன்னும் 1 மணி நேரத்தில் வந்து விடுவார்கள்" என்று சொல்லிவிட்டுப் பின்னரும் அவன் கிளாக்கரைப் பார்த்து "ஐயா, நீங்களும் உங்கள் பிள்ளையுடன் போயிருப்பீர்களென்றல்லவா நான் நினைத்திருந்தேன்; நீங்கள் பிள்ளையைத் தனியே விட்டிருக்கக் கூடாது" என்று சொன்னான். அவன் சொன்ன வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தே கிளாக்கர் திடுக்கிட்டார். "தம்பி, ஏன் அப்படிச் சொல்லுகிறீர்" என்று கிளாக்கர் கேட்க, அவன் கவலையுடன் சொல்லுகின்றான்:—

அவன் பொல்லாதவன்

"ஐயா, நீங்கள் ஒரு பெரிய மனுஷனைப் போற் காணப்படுகிறீர்கள்; பாலும் வெள்ளை மோரும் வெள்ளை யென்றபடி எல்லாரையும் உங்களைப் போல நல்லவர் என்று மதித்து நம்பி விடுகிறீர்கள்; அவனுடைய சரித்திரத்தைச் சொல்லப்போனாற் பாரதம் போல விரியும்; ஆனாலும் சுருக்கமாகச் சொல்லுகிறேன்: நீங்கள் பதஷ்டப்பட வேண்டாம். இன்னும் ஒரு மணித்தியாலம் பார்த்துவிட்டு, அப்பொழுதும் வரா விட்டால் ஆகவேண்டியதைச் செய்வோம்; அதையிட்டுக் கவலை வேண்டாம்; உங்கள் விஷயத்தில் அப்படியேதும் பிழை செய்வானென்று நான் நினைக்கவில்லை. ஐயா, நீங்கள் என் பிதாவுக்குச் சரி, உங்களைக் கண்டவுடனே என்னை அறியாமலே என் மனம் உங்கள் மீது பயபத்தி பாராட்டுகின்றது; சிறந்த, இந்தப் பாலசிங்க னென்பவனோ, குலகுடியிற் பிறந்தவனாயினும் பரம துஷ்டன்; இவன் பஞ்சமாபாதகங்களையும் அஞ்சாது செய்வான். என் அறியாமையினாலும் வாலிபப் புத்தியினாலும் நான் இவனிடத்தில் வந்து சிக்கிக்கொண்டு கழற்றிக்கொள்ளமாட்டாமல் அல்லற்படுகிறேன்; ஐயா நீங்கள் நினைக்கிறபடி, நான் ஒரு சாரதியல்லேன்; நானும் நல்ல மரபிற் பிறந்துள்ளேன்; என் பிதா மாதாக்கள் செல்வத்தோடிருந்தவர்கள்; அவர்களுக்கு நான் ஒரேயொரு ஆண்பிள்ளை; என் தமைக்கை நல்ல இடத்தில் ஒரு உத்தியோகத்தனைக் கல்யாணஞ் செய்து நல்லாயிருக்கிறாள்; இளம் வயதில் என் தகப்பனார் இறந்து விட நான் பள்ளிக்கூடத்திற் படித்து வந்தேன். அக்காலத்தொட்டே இவனுடன் பழகிக்கொண்டேன்; தீயவனாகிய இவனுடைய கூட்டுறவினால் நான் என் படிப்பை அலட்சியஞ்செய்து காலஞ்செல்ல, கல்வி கற்பதை அறவே விட்டுவிட்டு இவனுடன் கூடித் திரிந்தேன்; தாய் சொற்றுறக்கத் தொரு வாசகமில்லையென்ற பிரமாணம் என் தாயின் சொல்லைத் தட்டிக் கூடாத கூட்டங்கள் கூடி நடவாத நடை நடந்து எனக்குள்ள பொருளையெல்லாஞ் செலவழித்து, கைம்பெண்டாட்டி வளர்த்தகழுதையென்று ஊரார் என்னை ஏசத் திரிந்தேன். என்னால் தனக்கு நேர்ந்த கவலை காரணமாகத் தன்னைப் பிடித்த நோயினால் என்னைப் பெற்றவளும் இற்றைக்கு ஐந்துவருடங்களுக்கு முந்தி இறந்துவிட்டாள்; அந்த நேரத்திலும் நான் என் அன்னையின் அருமையை அறிந்திலேன்; தாயுமில்லையே இனி யார் என்னைக் கேட்பவர். நானே எனக்கும் எனக்குரிய பொருள் பண்டங்கட்கும் அதிகாரியென்று நினைத்துக் களித்திருந்தேன். என் தாய் இறந்தது அந்த நேரத்தில் அழுபவரான் [illegible] செல்லுக்குக் [illegible] விட்டது போலிருந்தது; நானும் பாசமாய்விட்டேன்; என்னிடத்தில் அப்பொழுதும் பொருள்பண்டம் பணம் எஞ்சியிருந்தது; அதற்கு முடிவு தேடுவதற்கு இந்தப் பாலசிங்கன் துணையாய் நின்றான். வீடு சுடுகிற இராசாவுக்கு நெருப்பெடுத்துக்கொடுக்கும் மந்திரிபோல நான் செய்யும் தீமைகளுக்கெல்லாம் அவன் வழிகாட்டித் துர்ப்புத்தியுஞ் சொல்லிவந்தான்; என்னை ஒரு சாரதியாக்கச் சொன்னான், உடனே ஆக்கினேன்; படக்காட்சி பார்ப்பதிலும், மற்றும் வேடிக்கைகள் பார்ப்பதிலும் காலங்கழித்தேன்; குடிவெறியறியாத எனக்குக் குடிக்கப்பழக்கிவிட்டவனும் இந்தப் பாதகன்தான்; என்பணத்தில் நானும் அவனும் உண்டாட்டுக் களியாட்டு என்பவைகளெல்லாம் செய்துவந்தோம். என் அக்கிரமங்களையெல்லாம் ஒரு தேசத்தில் உத்தியோகமாயிருக்கும் என் மைத்துனனும் சகோதரியுங் கேள்விப்பட்டு மனத்துயரடைந்து எனக்குப் புத்தி புகட்டி ஒரு கடிதம் எழுதியிருந்தார்கள். அந்த நேரத்திலிருந்த செருக்கினால் அக்கடிதத்தில் இரண்டுவரியைப்படித்துப் பார்த்துவிட்டுச் சினத்துடன் அக்கடிதத்தைக் கிழித்தெறிந்துவிட்டேன். அவ்வளவில் அவர்களும் கவலைப்பட்டுக்கொண்டு என்னைக் கைவிட்டுவிட்டார்கள்.

அவள் ஒரு அசமுகி

எங்கேனும் சாதியாயில் ஒரு பெண் எடுக்கலாம் என்று பார்த்தேன்; என்னைப்பற்றி அறிந்தவர்கள் யாராயினும் எனக்குப் பெண் தருவார்களா? எல்லாரும் மறுத்துவிட்டார்கள்; இப்பொழுது பாலசிங்கனுடன் படக்காட்சிபார்க்கப் போயிருப்பவள் ஒரு உத்தியோகத்தன் கலியாணமெழுத்துத் தள்ளிவிட்ட பெண். பாலசிங்கனை அறியாமல் இவளிடம் நான் நேரிற் போய் எனக்குப் பெண்ணாகவிருக்க உனக்குச் சம்மதமோ என்று கேட்டேன்; இவள் சிறிதும் யோசியாமல் அதற்கு உடன்பட்டாள்; [illegible] வந்தாலே போதும் என்று நினைத்து நான் சந்தோஷத்துடன் என்னிடம் பணமாக எஞ்சியிருந்தவை முழுவதையும் இவளிடம் கொடுத்தேன்; இவள் எனக்குத் துரோகஞ்செய்வாளென்று ஐயா, பெரியவரே, அந்த நேரத்தில் நான் கனவிலும் நினைத்ததில்லை; சில மாசங்கள் செல்ல இதனைப் பாலசிங்கன் அறிந்துவிட்டான்; தனக்குச் சொல்லாமல் இவளைப் பெண்ணாகவைத்திருப்பதை அறிந்து அவன் பெரிதும் ஆத்திரப்பட்டான்; ஆனால் அப்பொழுது அவன் தன் ஆத்திரத்தைப் புறத்தே காட்டாமல் முன்னரைக் காட்டிலும் அதிக விசுவாசமுடையவன் போல என்னுடன் நடக்கத் தலைப்பட்டான்; நான் உண்மையான விசுவாசம் என்று நம்பிவிட்டேன்; அந்த மித்திரத்துரோகி நாளடைவில் இவளைத் தன்வசமாக்கி இவள் என்னைப் பகைக்கச் செய்தான். இவள் வேண்டா வெறுப்பாக என்னுடன் நடக்கத் தலைப்பட்டாள்; நான் இந்த வஞ்சகத்தை அறியாமல் ஒரு நாள் இவள் ஏதோ தட்டிப் பேச இவளை நான் கையப்புடைத்தேன்; இவள் பெருஞ் சத்தமிட்டு "ஐயோ! என்னைக் கொல்லுகிறான்" என்று கத்தினாள்; என் பிடரில் ஒரு அடி உறைக்க விழுந்தது; ஆத்திரத்துடன் திரும்பிப் பார்த்தேன். பாலசிங்கன் என்னைச் சினந்து பார்த்து "அவளைத் தொட்டாயானால், உன்னைக் கொன்று விடுவேன்" என்று கோபாவேசத்துடன் சொன்னான். என் நிலைமையை நான் விளங்கிக்கொண்டேன்; அவனோடு அந்த நேரத்தில் ஏதும் பேசினால் சுந்தோபசுந்தர்போல் இருவரும் மாண்டு போக வேண்டிநேரும் என்று உணர்ந்தேன்; "சரி, உடையவனிற் கைப்பற்றியவன் மிடுக்கன்" என்று சொல்லிவிட்டு நான் அவனை விட்டுத் தப்பிப்போய்விடப் பார்த்தேன்; "அடே, எங்கடா போகப் போகிறாய்; இன்னும் உயிரோடு நீ இருக்க விரும்பினால் நான் சொல்லுகிறபடி நடந்துகொள்; இல்லையேல் உன்னுயிரை நீ காணமாட்டாய்" என்று அதட்டி உறுக்கி என்னைப் பின்னரும் அடிக்க வந்தான். நான் பயந்து நீ சொல்லுகிறபடியெல்லாஞ் செய்கிறேன்; என்னை அடிக்காதே என்று இரந்தேன்; ஐயா, தெய்வத்திற்கு முறையிடுவதுபோல் உங்களுக்குச் சொல்லுகின்றேன்; அன்று தொடக்கம் என் காரையும் அவளையும் பாலசிங்கன் அபகரித்துக்கொண்டான். என் தாய் சகோதரம் மைத்துனன் ஆகிய இவர்கள் சொன்ன புத்தியைத் தட்டி நடந்த பயனை இப்பொழுது அநுபவிக்கின்றேன். இதுதான், ஐயா, என் நிலைமை; இப்பொழுது உங்களுடன் இப்படியெல்லாம் பேசினேன் என்று அறிந்தாலும் அவனும் அவ

தொடர்ச்சி 3-ம் பக்கம்

தொழிலாளர் தட்டுப்பாடு ஏற்படலாம்

மொரவாக்காத் தோட்டத்துரைமார் சங்கத்தலைவரின் பயம்

மொரவாக்காப் பகுதித் தோட்டத் துரைமார் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் சங்கத்தலைவர் சென்ற வருஷத்திய நிகழ்ச்சிகளைப் பின்வருமாறு பேசினார்:—

சங்கத்தின் அங்கத்தினர் அனைவரும் இந்த டிஸ்திரிக்கில் ஒரே தோட்டத்தைத்தவிர ஏனைய எல்லாத் தோட்டங்களிலும் தொழிலாளர் தட்டுப்பாடு இல்லை யென்பதாக அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். தோட்டங்களை விஸ்தரிக்க மனமில்லாதவர்களைப் பொறுத்த வரையில் தொழிலாளர் கிடைப்பது பற்றிச் சந்தேகமில்லை. ஆயின், இப்பொழுது அநேக தோட்டங்கள் திரும்பவுந் திறக்கப் போகிறபடியால் தொழிலாளர் பஞ்சம் ஏற்படக் கூடுமென்று நான் அஞ்சுகிறேன்.

இந்தியத் தொழிலாளர் வருகை சம்பந்தமாக இந்திய அரசாங்கத்தார் நடைக்குக் கொண்டு வந்திருக்கும் தடை சமீபகாலத்திற்குள் நீக்கப்படுமென்று நம்புவதற்கில்லை.

மொரவாக்காப் பகுதியிலுள்ள தோட்டங்களில் சிங்களத் தொழிலாளர்களின் தொகை அதிகரித்திருப்பதாகவும் சங்க அங்கத்தவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

இங்கு தொழிலாளர்களுக்கிடையே அரசியற் சங்கங்கள் அமைக்கப்பட்டு வந்தாலும் சென்ற 12 மாதங்களிலும் பலமான தொழிலாளர் குழப்பமெதுவும் ஏற்படவில்லை.

மஹாகும்பாபிஷேகம்

ஏழாலையைச் சார்ந்த குப்பிளான் என்னும் தலத்திற் கோயில் கொண்டெழுந் தருளியிருக்கும் கற்பகப் பிள்ளையாருக்கு நிகழும் தை மீ ௧௮௳ புதன்கிழமை (31-1-40) காலை கும்பலக்கின சுப முகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேக வைபவம் இனிது நடந்தேறியது. அவ்வமயம் அன்பர்கள் அநேகர் அயலூர்களிலிருந்தும் தரிசனத்துக்கு வந்திருந்தனர். கும்பாபிஷேகம் முடிந்து தேவார திருவாசகாதிகள் ஓதப் பட்டபொழுது ஆங்குக் குழுமியிருந்த அன்பர்கள் இதயங்கள் அழலிடைப் பட்ட மெழுகுபோல ஆனந்த மேலீட்டால் உருகின. அபிஷேக கிரியைகளை முடித்துக் கொண்டு ஆசாரியர் பிரஹ்மஸ்ரீ சிவ. சதா. சோமசுந்தரக் குருக்கள் ஆசீர்வாதம் முடித்து அக்ஷதை, விபூதியாதியன வழங்கியபின் ஆலய கைங்கரியங்களைப்பற்றி அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தி விட்டுத் திருக்கோயிற்படியை விட்டிறங்குகையிற் சுபசகுனமாக வானம் சிறிது மாரிவழங்கிற்று.

கடித.

முதலியார் இராசநாயகமவர்கள்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறை ஆறுதலாகப் பார்க்கப் பங்குனி விடுமுறை நாட்களில் இருவேமும் வரவேண்டும் என அவர் அவாவுடன் குறிப்பிட்டிருந்தார். இதற்கிடையில் அதை மறந்துவிட்டுச் சென்றுவிட்டார்.

ஸ்ரீமான் ஜம்புலிங்கம்பிள்ளை அவர்களுடைய முயற்சியாலும் முதலியார் அவர்களுடைய ஆராய்ச்சிக் கட்டுரையாலும் பண உதவியாலும் கைலாயமாலை சிறப்பாகப் பதிப்பிக்கப்பட்டுளது. அங்ஙனமே வையா மாலையையும் வெளியிடக் கருதினர். அதற்காக இலண்டன் சாசனசாலையிலிருந்த பிரதிகளையும் எடுப்பித்துப் பெற்று, என்னையும் கூட்டி எழுதுவித்துப் பாடபேதங்களை நோக்கித் திருத்திக் கொண்டு அவர் மேற்பார்வையில் யாம் எழுதிய சரித்திரக் குறிப்புக்களுடன் பகுதி பகுதியாக வித்தியா சமாசாரப் பத்திரிகையில் வெளியிட்டு வந்தார்கள். அத்துடன் ஆங்கிலத்திலும் அந்நூலை மொழிபெயர்க்கத் தொடங்கி முக்காற் பங்கு வேலையும் முற்றுப் பெற்றுவிட்டது. எஞ்சிய பாகமும் இத்தக் கிழமை முடிவதற்குமுன் நிறைவேறி விடுவதாக எம்மிடம் கூறியிருந்தார். சென்ற வெள்ளிக்கிழமை எழுதிய கடிதத்தில் ஆங்கிலப் பதிப்பின் முகவுரையையும் அனுப்பியிருந்ததை அவர் இறந்த பின் நினைக்கும் பொழுது அதுவும் திருவருட் குறிப்பென்றே நினைந்து நினைந்து கவற்சியுற நேர்ந்தது. இந்நூலை அச்சிட்டு வெளியிடுதல் அவர் அருமை மக்க

தொடர்ச்சி 4-ம் பக்கம்

உலகம்பலவிதக்கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

ளும் என்னைக் கொன்றுவிடுவார்கள்" என்று சொல்லி முடித்தான். கிளார்க்கர் செய்வதின்னதென்றறியாதவராய்த் திகைத்தார்.

முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும்

பாலசிங்கன் தன்னுடைய பேச்சையும் கேளாமல் வேகமாக ரதத்தைச் செலுத்திச் செல்லக் கண்ட சொர்ணம்பிகை சிறிதுநேரம் திகைத்தனளேனும், உடனே தன் மனதைத் திடப்படுத்திக் கொண்டு "இவன் செய்வதைப் பார்ப்போம்" என்று ஒன்றும் பேசாமலிருந்தாள்; வேகமாகச் சென்ற ரதம் குறுக்கே இறங்கி கிராமாந்தமான ஒருகடற்கரையிற் போய் நின்றது; வற்றாகோமானதினாற் போலும் கடலில மெல்ல மெல்ல அலைகள் வீசின; அந்த கம்பிரவில மாத்திரமல்ல, பகற் காலத்திற்கூடும் அத்தெருவிலும் கடற்கரையிலும் மனுஷ சஞ்சாரம் வண்டிகளின் போக்கு வரவு உண்டோவென்றுயாவரும்சந்தேகப்படுவர்; அப்படிப்பட்ட ஒதுக்கான இடமாகும் அக் கடற்கரையும் அதற்குச் செல்லும் பாதையும். பாலசிங்கன் காரை நிறுத்திவிட்டுத் தன்னுடன் கூட வந்தவனை "வா கடற்கரைக்குப் போவோம்" என்று சொல்ல அவன் அதற்கு உடன்பட்டு இறங்கினான்; ரதத்தில் தான் முன்பே கொண்டு வந்து வைத்திருந்த பிரயாணப் பையை அவன் கையில் வைத்துக் கொண்டு, "என் காதற் களஞ்சியமே, கண்மணியே, நீரும் வருகிறீரா" என்று இதமாகக் கேட்டான்; "எதற்காக" என்றாள் சொர்ணம்; "வேறொன்றிற்குமல்ல, சற்று நேரம் சந்தோஷமாகப் பொழுது போக்குவோம்" என்று பாலசிங்கன் சொல்லுதலும் "ஆம், அது எனக்கும் விருப்பந்தான்" என்று சொல்லிக் கொண்டு "சங்கரன் நீயும்வா" என்று அவனும் பின் தொடரச் சொர்ணஞ் சென்றாள்; "சங்கரன் காரில இருக்கலாமே; காருக்குக் காவல் யார்" என்று பாலசிங்கன் கேட்க, "நீர் இருக்கும்போது இன்னுமொருவர் துணைக்கு வரமுடியுமா" என்றாள் சொர்ணம்; பாலசிங்கன் அவ்வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தே தன்னை மறக்கக்கூடிய சந்தோஷமடைந்தான்; இவைகளைக் கேட்டவுடனே பின்னே போன சங்கரன் மனம் அழன்றான்; அகத்துள் சொர்ணத்தின்மீது சீற்றங் கொண்டான்; பாலசிங்கனுடன் வந்தவன் முந்தியே போய் கடற்கரை மணலில் இருக்கவிட, அவன் அவனுக்கயலே இருக்க, சொர்ணம் அவனுக்கெதிரே சற்றுத் தூரத்தில் உட்கார, சொர்ணத்தின் பின்புறத்துச் சிறிது தூரத்திலிருந்தான் சங்கரன். பாலசிங்கன் தன் சட்டைப்பையிலிருந்த ஒரு சிறப்பை யெடுத்துப் பையைத் திறந்து "பனிக்கால மாதலினாற் போலும் அதிக குளிராகவிருக்கின்றது; அல்லாமலும் அதிக சிரமமாகவுமிருக்கிறது; இவைகளையுத்தேசித்து நான் வரும்போதே நல்ல மருந்தொன்றுகொண்டுவந்திருக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டு ஒரு அங்கிபோட்டுக் குடிவகைப் போத்தலையும் ஒரு பளிங்குக் "கிளாஸை"யும் எடுத்து, தான் எடுத்த இவ்வொரு கருவியினாற் போத்தலைத் திறந்து, அக்கக் கிளாஸ் நிறைய அம்மதுபானத்தை வார்த்துக் கொண்டு, "கண்ணே, சொர்ணம், இதில் நீர் கொஞ்சம் அருந்திவிட்டு எஞ்சியதை எனக்குக் குடிக்கத் தரவொண்ணாதா? இது பெரிதுஞ் சிரமபரிகாரியாக விருக்குமே" என்று சொல்லிச் சொர்ணத்தின் முன் எழுந்து நின்று நீட்டினான்.

"மறைக்காலிருட்டானாலும் மந்தி கொம்பிழக்கப்பாயாது"

சொர்ணம் அதனை ஏற்றுக் கொள்ளாது "அதுசரி, ஆண்கள் குடிக்குமுன் பெண்கள் வாங்கிக் குடிக்கும் வழக்கம் எங்காவதுண்டா? நீர் உதை முற்றாய் அருந்திவிட்டுப் பின்னர் எனக்கு மேலும் வார்த்துத் தாரும் நான் குடிக்கின்றேன்" என்று அன்பு பெருகச் சொன்னாள்; "கண்ணே அப்படியா சொலலுகிறீர்; நீர் சொல்வது முழுவதும் சரி, குலத்துக்குத் தக்க குணம்" என்று சொல்லிக்கொண்டு அவ்வளவையும் ஒரு மூச்சிற்பருகிவிட்டுஅவன்பின்னரும் நிறையவார்த்துச் சொர்ணத்திற்கு நீட்ட அவள் அதை வாங்கி, "என் அருமையான அக்கா, நீங்களிருக்க நான் முந்திக் குடிப்பது முறையல்ல; இத்தாருங்கள் இதைக் குடித்துவிட்டுத் தாருங்கள்" என்று சொல்லிநீட்ட, அவ[illegible]தை ஏற்கப் பின்னிட, "குடி[illegible]ங்கி" என்று பாதிவெறிகொ[illegible] பாலசிங்கன் உறுக்கி அதட்ட[illegible]ன் பயந்து உடனே வாங்[illegible]வியும்விடாமல் அப்படியே குடித்துவிட்டுக் கிளாசைத் திருப்பிச் சொர்ணத்தின் கையிற் கொடுத்தான்; கிளாசை வாங்கிப் பின்னரும் மதுபானத்தை விட்டு நிறைத்துக்கொண்டு, "சங்கரன், பக்தி வஞ்சகம் ஆகாது நீயுங் கொஞ்சம் பருகிப்பாரேன்" என்று சொர்ணஞ் சொல்லுதலும், சொர்ணத்தின் விபரீதமான செயலையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த சங்கரன் "அம்மா, வீண் கதை பேசாதீர்கள்; இப்படியேதும் என்னைக் கேட்டால் இந்தக் கடலுக்குட் குதித்து என் உயிரை விட்டுவிடுவேன்" என்று கோபஞ் சிந்தச் சொன்னான். சொர்ணம் புன்னகைசெய்து கொண்டு "இவனையும் நீர் குடித்தாற்றான், நானுங் குடிப்பேன்" என்று சொல்லி மதுபானம் நிறைந்த பளிக்குப் பாத்திரத்தை நீட்ட, அவன் "மை டார்லிங், பிறிங் இற்" "என் அன்பே, இங்கே தாரும்" என்று சொல்லி வாங்கி அவ்வளவையும் ஒரு நொடிப்பொழுதில் உட்கொண்டுவிட்டு, சரி, இனி என்னை நீர் வார்த்துத் தரும் என்று சொல்லிக் கிளாசை நீட்டும்போது, மதமயக்கத்தினால் அவன்மீது விழ, அவள் சற்றே விலகிக்கொள்ள, அவன் வெண்மணலில் வீழ்ந்துகிடந்துகொண்டு மழலைமொழி பேசத் தொடங்கினான். பாலசிங்கன் முழுவெறியுடன் கிடக்கவும், கூடவந்தவன் பாதிவெறியுடன் இருப்பவுங் கண்ட சொர்ணம் "அக்கா, நேரம் அகாலமாகின்றது, இனிப் புறப்பட வேண்டும், மெல்ல அவரைத்தூக்கி அணைத்து நடத்திக்கொண்டு காரடிக்கு வாருங்கள்" என்று அவனுக்குச் சொர்ணஞ் சொல்ல, அவனும் அவனைக் "காரடிக்குப் போவோம், வாருங்கள்" என்று சொல்ல, பிரேதத்தைக் குளிப்பாட்ட நிறுத்துவதுபோல அவன்ஒருவாறுநிறுத்தினான்; "துரையே மெல்ல எழுந்து வாரும் காரடிக்குப் போவோம்" என்று சொர்ணம் இனிய குரலுடன் சொல்ல, அவன் சொர்ணமென்று நினைத்துக்கொண்டு தன் வைப்பாட்டி தோளிற் கையைப் போட்டுக்கொண்டு "கண்ணே, சொர்ணம், இப்பொழுதானா என்மீது உமக்கு மனம் இரங்கியது" என்று சொல்லித் தள்ளாடி நடந்து காறண்டைபோக, சொர்ணம் காரின் பின்னாசனத்திற்குரிய கதவொன்றைத் திறந்துவிட, பாலசிங்கன் அதில் "தொப்பென்று" இருந்து சரிந்தான். "சங்கரன், போத்தலையும் கிளாசையும் பைக்குள் எடுத்து வைத்து மூடிக்கொண்டு பையை இங்கே கொண்டுவா" என்று சொர்ணஞ்சொல்ல, சங்கரன் 'முணுமுணு'த்துக்கொண்டு அவள் சொன்னபடி பையை எடுத்துவந்து காறுள்வைத்தான். "அக்கா, அவரை அவதானமாகத் தாங்கிக்கொள்; பாவம்" என்று அவருக்குச் சொல்லிவிட்டு, "சங்கரன், நீ முன்புறத்தில் ஏறி இரு" என்று சொல்லி அவனையும் அப்படியே வந்திருக்கச் சொல்லி விட்டு, சொர்ணம் சாரதிக்குரிய ஆசனத்திலிருந்துகொண்டு ரதத்தைத் திருப்பி வேகமாகச் செலுத்தினாள்.

—(வரும்)

மங்கைக்கு அஞ்சிய வாலிபனின் முறைப்பாடு

பம்பாய், பெப், 1௳

அழகியவொரு மங்கையின் தொல்லையிலிருந்து தன்னைப் பாதுகாக்கவேண்டுமென்று ஒரு வாலிபன் பொலிஸாரிடம் முறையிட்டுக் கொண்ட ஒரு ரஸமான சம்பவம் இந்நகரில் நேற்று முன் தினம் நடைபெற்றது. அவ்வாலிபன் ஒரு மில் தொழிலாளி. ஒரு நாள் அந்தப் பெண் தன்னைப் பிடித்து இழுத்துப் படக்காட்சிக்கு அழைத்துக் கொண்டு போனதாக அவன் கூறினான். கடைசியில் தன் ஒழுக்கம் கெடாமலும் தன்னைக் கடத்திச் செல்லாமலும் பாதுகாக்க வேண்டுமென்று அவன் பொலிஸாரை வேண்டினான்.

சிறுவர்கள் லாகிரி உபயோகிப்பதற்குத்தடை

கராச்சி, பெப், 2௳

பொதுஸ்தலங்களிலிருந்து கொண்டு லாகிரி வஸ்துக்களை உபயோகிப்பதையும் 20 வயதுக்குக் குறைவான சிறுவர்கள் லாகிரி வஸ்துக்களை உபயோகிப்பதையும் கட்டுப் படுத்துவதற்கான ஒரு சட்டம் சிந்து அசெம்பிளியில் இன்று நிறைவேற்றப்பட்டது. ஜமீந்தார்களின் குழந்தைகளுக்குக் கட்டாயமாகக் கல்வி போதிப்பதற்கான மற்றொரு சட்டமும் நிறைவேறியது.

திடீரெனத் தீப்பற்றிய பஸ்

மூவருக்கு நெருப்புக் காயங்கள்

நாவலப்பிட்டி ஜன 21

கம்பளை றோட்டிலுள்ள ஒருபெற்றோல் நிலையத்தில ஒரு பஸ் திடீரெனத் தீப்பற்றியது. இத் தீவிபத்துக் காரணமாக ஒரு பிரயாணியும் டிரைவரும் பெற்றோல் நிலையச் சிப்பந்தி ஒருவரும் சிறிது காயமடைந்தனர்.

நாவலப்பிட்டிப் பொலிசார் இரு தீயணைக்கும் எஞ்சின்களோடு வந்து நெருப்பை அணைத்துவிட்டனர். ஆகவே, அதிக சேதம் ஏற்படவில்லை.

பெற்றோல் நாளிகள் குழாயில் விழுந்ததால் தீ மூண்டிருக்கலாமெனக் கருதப்படுகிறது. பெற்றோல் எடுத்துக் கொள்வதற்காகச் சேர்த்திருந்த பஸ் பெற்றோல் நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

பொலிசார் உடனே வந்து நெருப்பை அணைத்திரா விட்டால் மிகுந்த சேதம் ஏற்பட்டிருக்கக்கூடும்.

தொழிலாளர்களின் பெரும்பகைவர் யார்?

"தொழிற்கட்சித் தலைவரென்சொல்லிக் கொள்பவர்களே"

காலி, பெப், 5௳

புதிதாக அமைக்கப்பட்ட காலி நகரசபைத் தொழிலாளர் சங்கத்தின் ஆதரவில் நேற்றுப்பிற்பகலிற் காலி முற்றவெளியில் தொழிலாளரின் கூட்டமொன்று நடைபெற்றது.

அவ்வமயம் சங்கத்தலைவர் திரு. டப்ளியு டி. விஜயதுலசூரியா பேசியதாவது:—

காலி நகரசபைத் தொழிலாளர்களுக்கு வாழ்க்கைச் செலவிற்கும் போதுமான சம்பளம் கொடுக்கப்படவில்லை. இப்பொழுது அவர்களுக்குக் கொடுக்கப்படும் தினச்சம்பளம் (50சதம்) குடும்பத்தை நடத்துவதற்குப்போதுமானதல்ல இலங்கையில் தொழிற்கட்சிகளின் தலைவர்களென அழைக்கப்படுபவர்கள்தொழிலாளர்களின் பெரும்பகைவர்களாவார்கள் முன்பு திரு. ஏ. ஈ. குணசிங்கா தொழிலாளர்களின் அபிவிருத்திக்காக அதிக சிரத்தையுடன் உழைத்து வந்திருக்கிறார். ஆயின், இன்று திரு. குணசிங்கா ஒரு முதலாளியாகப் பெரியவங்களா ஒன்றில் கறுவாக்காட்டில் வசித்துவருகிறார். தனது முன்னேற்றத்திற்கு உதவியாயிருந்த அதே ஏணியை இவர் இப்பொழுது காலால் உதைத்துத் தள்ளிவிட்டார். இனி அவரும் அவரது சீடர்களும் தொழிலாளர்களின் உண்மைப் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொள்ள முடியாது.

பின்னர் நகரசபைத் தொழிலாளர்களுக்கு ஒருரூபாய் குறைந்த விகிதத் தினச்சம்பளம் கொடுக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றி வைக்கப்பட்டது.

மாத்தறையைச்சேர்ந்த டக்டர் எம். ஏ. விக்கிரமசிங்கா பேசும்போது, அரசாங்க சபை அங்கத்தினர்சிலரின் நடவடிக்கையையே மலைநாட்டுப் பக்கத்திலுள்ள தோட்டங்களில் தொழிலாளர்களுக்கிடையே ஏற்பட்ட குழப்பங்களுக்கெல்லாம் காரணமெனக் குறிப்பிட்டார்.

மேலும் டக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா தொடர்ந்து பேசியதாவது:-

உயர்ந்த சம்பளம் கொடுக்க மறுக்கப்பட்டமையினாலேயே சில காலத்திற்கு முன்னர்ச் சில மலையாளத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தஞ் செய்தனர். அப்பொழுது திரு. குணசிங்கா அவர்களுக்குப் பதிலாகச் சிங்களத் தொழிலாளர்களுக்கு வேலைகொடுக்க ஏற்பாடு செய்தார். சில வாரங்களின்பின்னர் மலையாளிகள் முந்திய விகிதச் சம்பளத்திற்கு வேலை செய்யத் தாங்கள் வருவதாகத் தெரிவித்தனர். ஆகவே சிங்களத் தொழிலாளர்கள் சோம்பேறிகளென்று சொல்லி நீக்கப்பட்டு மலையாளத்தொழிலாளர்கள் திரும்பவும் வேலைக்குச் சேர்க்கப்பட்டனர்.

பின்னுஞ் சில பிரபலஸ்தர்கள் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

நீர்மூழ்கித் தலைவனுக்குப் 19 வயசு தானும்

'கழுகும்ஓநாயும்' பிரிட்டன் வந்து சேர்ந்தன

போலந்துக்குச் சொந்தமாக ஆர்ஜெல் (கழுகு) என்னும் ஒரு நீர்மூழ்கி யிருந்தது. அது யுத்தக் கொந்தளிப்பினிடையே, ஜெர்மன் கடற்காவல்களைக் கடந்து இங்கிலாந்துக்கு ஓடிவிட்டது.

அதன் தலைவனுக்கு வயசு 19 தானும். அவன் பிரிட்டனை அடைந்ததும், "இதோ நான் வந்துவிட்டேன். கடற்போர் வேலை எப்போது ஆரம்பமாகவேண்டும்?" என்றானும்.

போனமாசம் போலந்துக்காகப் பிரான்ஸில் செய்யப்பட்ட வில்க (ஓநாய்) என்னும் நீர்மூழ்கியும் பிரிட்டனுக்கு வந்துவிட்டதாகக் கடற்படை இலாகா வெளியிட்ட செய்தி கூறுகிறது.

தந்திச் சமாசாரம்

ஜர்மனிய ஆகாயவிமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டமை.

8-2-40

இங்கிலாந்தின் வடகிழக்கு கரையிற் குண்டுகளைப் பெய்த ஜர்மனிய ஆகாய விமானம் இரண்டு சுட்டு வீழ்த்தப் பட்டனவென்றும் அவைகளிலிருந்தோர் மாண்டனரென்றுஞ் சொல்லப்படுகின்றது.

ரூஷிய பின்லண்ட் யுத்தம்

ரூஷிய ஆகாய விமானிகள் பின்லண்டின் மீது பறந்து சென்று பல இடங்களில் வெடிகுண்டுகளைப் பெய்கின்றனர். குண்டுகளால் பலர் மோசமான காயமடைய 20 பேர் வரையில் மாண்டனராம். பெருவாரியெயி வென்னுமிடத்தின் மேலாக 54 ரூஷ்ய ஆகாயப்படை ஒருங்கு பறந்து சென்று வரையின்றி வெடி குண்டுகளைப் பெய்து பலர்க்குச் சேதம் விளைத்தன. பின்லண்ட் ஆகாய விமானங்கள் அவைகளுக்கு மாறாக எழுந்து தாக்கிய போது 45 ரூஷிய விமானங்கள் பின்வாங்கிப் பறந்து விட்டனவாம். ஒரு விமானம் பின்லண்டியராற் சுட்டு வீழ்த்தப் பட்டதாம். ரூஷிய விமானங்கள் இட்ட வெடிகுண்டுகளால் 4 வீடுகள் எரிந்தழிந்தன, ஒருவன் கொல்லுண்டான். அந்த விமானங்களிற் சில பின்னரும் மீண்டு வந்து ஒரு வைத்திய சாலையின்மீது குண்டுகளை விட்டு அதனைச் சிதைத்தன. மூன்றாமுறை மீண்டு பறந்து சென்று 15 வீடுகளைத் தீக்கிரையாக்கின. ரூஷிய விமானங்கள் இட்ட வெடி குண்டுகளின் தொகை 2000 வரையிலிருக்குமாம்.

ரூஷியர் கோரமாகத்தாக்குகின்றனர்

4-2-40

காரிலியன் நீரிணைக்குச் சமீபமாக ரூஷியர் பின்லண்டினரைக் கோரமாகத் தாக்குகின்றனர்; அங்கே மன்னர்ஹைம் அரணைச் சிதைத்து விடுவதே அவர்கள் நோக்கமாம். 47 ரூஷிய ஆகாய விமானங்கள் 500 வரையில் தொகை கொண்ட குண்டுகளை 130 தானங்களிற் பெய்து சேதம் விளைக்கலாயின. பல ஆலயங்கள் பணவங்குக் கட்டடங்கள் வேறும் பல தாபனங்கள் சேதமடைந்தன. தந்திக் கம்பிகளும் டெலிபோ[illegible]களும் அறுக்கப் பட்டன. யுத்தத்தில் 3000 ரூஷியர் [illegible] மாண்டனரென்று சொல்லப்படு[illegible]து.

சமரிற் சம்பந்தப்படாத சாதியார் இழந்த கப்பல்கள்

யுத்தம் தொடங்கிய காலந் தொடக்கம் இற்றைவரையில் நோர்வே அரசினருக்குப் பல வழியிலும் சேதப்பட்ட கப்பல் 40 வரையிலாகும், மாண்ட கப்பற்காரர், 40 பேர் வரையிலிருக்குமாம். சுவீடினுக்கு நேர்ந்த கப்பற்சேதம் 30. மாண்ட கப்பற்காரர் 200 பேர் வரையில் இருக்குமாம்.

சின யப்பானிய யுத்தம்

கனானிங் பிங்யாங் என்னுமிடங்களில் நடந்த சின யப்பானிய யுத்தத்தில் இருபதினாயிரம் சின வீரர் யுத்த களத்தில் மாண்டு கிடப்பக் காணப்பட்டனராம். அதிகத் தொகையான ஆயுதங்களும் குண்டுகளும் மருந்துகளும் அங்கே கிடந்தனவாம்.

பாரிய கனடாக்கப்பல் பசுபிக் சமுத்திரத்தில் மூழ்கியது

பீவர் போர்ட் என்னும் பதினாயிரம் தொன் கொண்ட கனடா நாட்டுப்பாரிய கப்பல் பசுபிக்சமுத்திரத்தில் ஜர்மனியரால் அமுக்கப்பட்டது. இது ஜர்மனிய தொப்பிடோ வள்ளத்தால் உடைத்துத் தாக்கப்பட்டு அமுக்கப் பட்டதாம். இதிலுள்ள கப்பற்காரர் 70 பேர்.

இன்னுமொரு பிருத்தானிய கப்பல்

1064 தொன் கொண்ட போர்ட்டிலத் என்னும் பிருத்தானிய கப்பல் வடகடற் பரப்பில் இட்ட வெடிகுண்டுச் சக்கரத்தில் முட்டி நீருள் மூழ்கியது. கப்பற்காரர் பலர் மாண்டனர்.

தமிழர்-சிங்களவர் கலப்பு மணம்

சமூக ஒற்றுமையை ஏற்படுத்துமென்று தொழில்மந்திரி கூறுகிறார்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிப் பழைய மாணவர்கள் விருந்து சென்ற ஞாயிற்றுக்கிழமை அக் கல்லூரியின் தற்காலிக தலைவர் திரு. ஜே. டபிள்யூ. அருட்பிரகாசம் தலைமை வகிக்கக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறலாயிற்று. அத் தருணம் டக்டர் எஸ். வி. துரைராஜா பேசும்போது சிங்களவர்-தமிழர் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்குச் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கு மிடையே கலப்பு மணங்கள் நடைபெறவேண்டுமெனவும் அதன் பயனாகக் கடைசியில் உண்மையான இலங்கையர் சமூகமென்பது ஏற்படுமெனவும் குறிப்பிட்டார்.

[illegible]ந்திரி திரு. ஜி. ஸி. [illegible]யா, தமிழர்களுக்கும் [illegible]ளவர்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டுமென்பதையும், கலப்பு மணங்களின் பயனாக அப்படிச் செய்யமுடியுமென்பதைத் தாம் ஒப்புக்கொள்வதாகவுங் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசியதாவது:-

வகுப்புவாரியாக அரசியல் ஸ்தாபனங்களை அமைப்பதுவிரும்பத்தக்கதல்ல. இலங்கை மக்கள், சிங்களவர், தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர் ஆகியோர் அனைவருக்கும் ஒரே அரசியல் சமூகப் பொருளாதார நலவுரிமைகள் சம்பந்தமான விவகாரங்களே ஏற்பட்டுள்ளன. ஆயின், தமிழர்களோ அல்லது சிங்களவர்களோ தங்கள் பாஷைகள் கலைகள் முதலியவற்றைஅபிவிருத்தி செய்வதற்கென வகுப்புவாரியான ஸ்தாபனங்களை ஏற்படுத்திக்கொள்வது ஆக்ஷேபிக்கத் தக்கதல்ல.

இந்தஅபிப்பிராயத்தை மனத்தில் வைத்துக்கொண்டு நாம் முதலில் "இலங்கையர்கள்" என்பதாகவும் நம்மைக் கருதினோமானால் நம்மிடையே ஏற்பட்டுள்ள சிக்கலான விவகாரங்களையெல்லாம் விரைவில்முடிவு செய்துவிடலாம்.

கல்விச் சட்டத் திருத்தங்கள்

கல்விச் சட்டத் திருத்தங்கள் சம்பந்தமாகப் பேசும்போது திரு. கொறியா கூறியதாவது:-

கல்விமந்திரி சில ஆலோசனைகளை அரசாங்கசபையின் முன்பு சமர்ப்பித்திருக்கிறார். அதனால், அரசாங்க சபை அவற்றை அப்படியே ஒப்புக்கொண்டு விடுமென்றது அர்த்தமாகாது. அரசாங்கசபையின் தூண்டுதலின் பேரிலேயே மத சம்பந்த பாடசாலைகளின் நலவுரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டுக் கல்விச் சட்டத்திற் சில விதிகள் சேர்க்கப் பட்டன. ஆகையால், நீங்கள் அரசாங்க சபையிற் கொண்டு வரவிருக்கும் விதிகளை நான் எனது சொந்தமுறையில் அங்கீகரிக்கவில்லை. உத்தேசிக்கப்பட்டுள்ள விதிகள் அரசாங்க உதவிபெறும் பாடசாலைகளில் அளிக்கப்படும் ஆங்கிலக் கல்விப்போதனைக்கு இடைக்கட்டையாக இருக்குமென்பது எனது அபிப்பிராயம்.

ஆப்கானிஸ்தானில் சோவியத் பார்வை

நாசிக்கோஷ்டியும் வந்தது

இந்தியாவின் வாயில் போலிருக்கும் ஆப்கானிஸ்தானத்தில் சோவியத் ரூஷியாவின் பார்வை விழுந்திருக்கிறதென்றும், நாஸி வியாபாரக் கோஷ்டியொன்று பாளையமடித்திருக்கிறதென்றும், ஓர் ஆங்கில நிருபர் எழுதுகிறார்.

மேற்படி வியாபாரக் கோஷ்டியைச் சேர்ந்தோர் மூவர். அவர்களின்பெயர் மேஜர் வான் ரிட்ஸ்கன், மேஜர் ஹக், கப்டின் பிராக்கன் ஹீம் அவர்கள் இரகசியமாகக் காபூல் நகரையடைந்து சோவியத் ஸ்தானிகருடன் தங்கி வருகின்றார்கள்.

அவர்கள் வந்ததும் ஆப்கானிஸ்தான் தன் படையைப் பெருக்கத் தொடங்கிவிட்டது. அதனைத் தொடர்ந்து ஈரான்நாடு ஏற்கெனவேயிருந்த சேனைக்குமேல் 50 ஆயிரம் பேரைப் பதிவு செய்துகொண்டது. மெஸபொட்டேமியாவின் கோட்டை கொத்தளங்கள் பலப்படுத்தப்பட்டுள்ளன. துருக்கி, ஈரான், ஈராக், காபூல் ஆகிய நான்கு தேசங்களும் சமீபத்தில் தத்தம் எதிர்காலவேலைத் திட்டத்தைப்பற்றிக் கலந்து பேசிக்குமாம்.

மேற்படி தகவல்களை வெளியிடும் நிருபர் மற்றொரு இரகசியமுஞ் சொல்லுகிறார். ஸ்டாலின் ஆப்கானிஸ்தானம் முதலிய தெற்கு நாடுகளிற் பாயுந் தருணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறாராம்.

மனித நூல் (Anthropology)

திரு. ந. சி. கந்தையாபிள்ளை

(Copy Right)

மொழிநூல்

டாவினுடைய கொள்கையில் உண்மை இருப்பதுபோல் தோன்றினாலும் உண்மை இல்லை. மக்கள் தோன்றிய காலம்முதல் இதுவரையில் பிராணிகளின் ஒரு அச்சு இன்னொரு அச்சாக மாறினதையோ, குரங்கிலிருந்து மனிதன் தோன்றினதையோ எவரும் அறிந்து கூறவில்லை. சில இயற்கை செயற்கைக் காரணங்களால் சில பிராணிகளின் வடிவம் முன்னைவிடச் சிறிது மாற்றமடைந்திருப்பது உண்மையாகும்.

மனித இனங்கள்:

மனிதநூலார் மக்களைப் பல இனங்களாகப் பிரித்திருக்கின்றனர். நிகிரோவர் சீனர் அவுஸ்திரேலியர் என்னும் மூவரையும் ஒருவரிலிருந்து ஒருவரைப் பிரித்தறிவதோடு அவர்களை ஐரோப்பியரிலிருந்து வேறுபடுத்தியும் காணலாம். இவ்வகையான பிரிவு சாதி எனப்படும். பல சாதியினரது உற்பத்தி எவ்வாறிருந்தபோதும், அவர்களது வேறுபாடுகள் அவர்களது மூதாதைகளைப் பொறுத்தன்ன, சாதிகள் பெரும்பாலும் நிறத்தைக்கொண்டு தீர்மானிக்கப்படுகின்றன. எகிப்திய பிரமிட்டுச் சுவர்களில் அக்காலத்தில் வாழ்ந்த சாதியாரின் நிறம் தோன்றும்படி சித்திரங்கள் வரையப்பட்டிருக்கின்றன. 6000 வருடங்களுக்குமுன்னும் சாதிப்பிரிவுகள் இருந்தன என்பதை அவை உணர்த்தும். அக் காலத்தில் மஞ்சட் கபில நிறமுள்ள கனானித் (Cananite) சிவப்புக் கபில நிறமுள்ள எகிப்தியன், பிரகாசமுள்ள லிபியன் (Lybyan) கரிய நிறமுள்ள நிகிரோவன் எனச் சாதிப்பிரிவுகள் இருந்தன போலவே இன்றும் சாதிகள் நிறம்பற்றிப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

நிறமல்லாமல் கண்மணியின் நிறமும் கவனிக்கப்படுதல் வேண்டும். வித்தியாசமான நிறமுள்ள சாதிகளின் கண்மணியும் வெவ்வேறு நிறமாயிருக்கும். சிவந்த சாதிகளின் கண்மணி நீலமாகவும் உரோமம் சணல்நார் நிறமாகவும் இருக்கும். வட ஐரோப்பாவிலுள்ள சாதிகளின் இடையே இவ் அடையாளங்களைக் கவனிக்கலாம்.

நிறத்திலும்பார்க்க மயிரின் அமைப்பு சாதிகளை நன்றாகப் பிரித்துக்காட்டும். மங்கோலிய சாதிகளுக்கு உடம்பில் மயிர் அற்பமாக இருக்கும். ஆபிரிக்க புஷ்மன் சாதியாரின் நீண்ட மயிரையும், பப்புவான் தீவுகளிலுள்ள மயிருடைய சாதியாரின் நெருங்கி வளர்ந்த மயிரையும், சமமாக வளர்ந்த ஐரோப்பியரின் நீண்ட மயிரையும் பார்த்து வேற்றுமை அறியலாம். வட அமெரிக்கனின் அல்லது மலாயனின் நெறுநிட்டமான மயிரையும் ஐரோப்பியரது நெளிந்த அல்லது நேரான மயிரையும் நிகிரோவருடைய சுருண்ட மயிரோடு ஒப்பிட்டு அறியலாம். மயிர்களை அணுதரிசனியால் பார்த்து கிமிர்ந்த மயிர், நெளிந்த மயிர், சுருண்ட மயிருடைய சாதிகளை அறிந்து கொள்ளலாம்.

உயரம் ஒரு சாதியை நிர்ணயிக்கும் பொதுவான குறியன்று. ஆயினும் ஆங்கிலர் நிகிரோவர் வட அமெரிக்கர் முதலியோரின் உயரம் வேறுபட்டிருத்தலைக் கவனிக்கலாம். உயரம் அநேக சந்தர்ப்பங்களில் உயர்ந்த "பாதகோனியரையும்" (Patagonian) கட்டையான "பிமூசி"யரையும் வேறுபடுத்தி அறிய உதவுகின்றது. அற்ப வேறுபாடுள்ள பூதானிய கெல்திய பரம்பரையில் உள்ளவர்களையும் வேறுபடுத்தி அறிய இது உதவுகின்றது. அங்கங்களின் நீளம் பருமைகளை முண்டத்தின் நீளத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் முறை ஆபிரிக்க அமெரிக்கச் சாதிகளைப் பிரித்தறியத்தக்கதாக இருக்கின்றது. பிட்டத்தின்கீழ் எலும்புகளை ஒப்பிடுதல் விசேடமானது. இவ்வகையான அடையாளங்களைக் கொண்டு சாதிகளைப் பிரிப்பதற்குரிய பிரமாணங்கள் இருக்கின்றன,

மண்டை:

நிறப் பரீட்சைக்கு அடுத்ததாக மண்டைப் பரீட்சை கையாளப்படுகின்றது. கபாலத்தின் வேறுபாடுகளை அறியும் முறை வருமாறு:-

மண்டையின் நீளத்தையும் அகலத்தையும் அளந்து அகலம் நீளத்தில் 100க்கு 80 இருக்குமாயின் நீண்ட மண்டை எனப்படும், 80க்கு மேற்பட்டால் அகலமண்டை எனப்படும்; 75க்கும் 80க்கும் இடையில் இருந்தால் நடுத்தரமானதெனப்படும். நிகிரோவன் அல்லது அவுஸ்திரேலியனின் மண்டை 72 வரையில் இருக்கும். தாத்தாரியனது 88 வரையிலும்; ஐரோப்பியனது 78க்கு அதிகமாகாமலும் இருக்கும். தலையின் பின்புறத்தைப் பார்த்து வட்டம் அல்லது கூரானமண்டை என்றும் அறியலாம். கீழ் வாய் எலும்பைக் கவனித்தும் சாதிகளைக் கண்டுபிடிக்கலாம். நல்ல அமைப்புள்ள ஐரோப்பியனின் மண்டையிற் காணப்படுவதை விட அவுஸ்திரேலியனின் கீழ் வாய் எலும்பு முன்புறம் தள்ளியிருக்கும். அது சரிந்திருக்கும் கோணத்தை அளந்து உயர்ந்த தாழ்ந்த சாதிகளைக் கண்டுபிடித்தல் கூடும். நெற்றி வளர்ந்திருப்பதாலும் அங்கு அமைந்திருக்கும் வகையாலும் கோணங்கள் ஏற்படுகின்றமையால் கோணங்களை அளப்பது சிலரால் ஆட்சேபிக்கப் படுகின்றது. கபாலம் மண்ணினால் நிறைக்கப்பட்டுக் கன அளவையால் (Cubic Measures) அளக்கப்படும். நாகரிகமடைந்த மனிதனின் மூளை காட்டுமிராண்டியினது மண்டையிலும் கனம் அதிகமுள்ளதாயிருக்கும். அவுஸ்திரேலியனதும் நிகிரோவனதும் மண்டைகளை அவற்றின் ஒடுக்கத்தாலும் கீழ்வாய் எலும்பு முன்புறம் தள்ளியிருப்பதாலும், ஆங்கிலேயனது மண்டையினின்றும் பிரித்தறியலாம். அவுஸ்திரேலியனது மண்டையை நிகிரோவனது மண்டையின் நிமிர்ந்த பக்கங்களாலும் வளைந்த புருவங்களாலும் வேறுபடுத்தலாம். முகவெட்டு மண்டையைப் பொறுத்திருக்கின்றது. முகம் முட்டை, நீளம் கூர் என்னும் வடிவுகளாகப் பிரித்துக் கூறப்படும்.

(தொடரும்.)

தயவுசெய்து எமக்கெழுதுங்கள்!

தூய்மையான கஸ்தூரி, சுத்தமான காஷ்மீர்க் குங்குமப்பூ, பரிசுத்தமான முத்து, சுத்தமான கோரோசனை, சிலாசத்து, அம்பர்கிரீஸ், பச்சைக் கர்ப்பூரம், பொன் வெள்ளி இலைகள் இவைபோன்ற வேறு விலையுயர்ந்த பொருள்களும், மருந்து வகைகளுக்கு வேண்டிய அருமையான மூலிகைகளும் தேவைப்படும் போது எங்களுக்கு எழுதுங்கள். பிரசித்தி பெற்ற டாக்டர்களும் வைத்திய நூலறிஞர்களும் எமது சரக்குகளை ஆராய்ந்து அவை மிக்க திருப்தி யளிப்பவை என்றும் திறமானவை யென்றும் கண்டிருக்கின்றனர். அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கும் மகாராஜாக்களின் பிரதான டாக்டர்களுக்கும் நாமே இவற்றை உதவி வருகிறோம்.

பூரணவிபரங்களை அறியவிரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதுக:

பாலா பிரதர்ஸ் (ரிஜிஸ்டர் செய்யப்பட்டது)

கஸ்தூரி & பெருங்காய வியாபாரிகள், ஆதம்பூர் (ஜலந்தர்) பஞ்சாப்.

Y, 64, 14-6-39—13-6-40) வ.

யுத்தசமாச்சாரச் சொற்பொழிவு

20-வது பிரசங்கம்

1-2-40 மாலை நடந்த ஆகாயவசனிப் பேச்சு

26-1-40 தொடக்கம் 1-2-40 வரையில் நடந்த நிகழ்ச்சிகள்

யுத்த நிலைமை மிகவும் மந்தமாக இருப்பதைக்கண்ட பலர் இது மிகவும் நூதனமான யுத்தம் என்றுதான் பேசிக்கொண்டிருந்தார்கள். ஆனால் இந்த மந்த நிலைமையிலும் ஒரு திருப்தி யேற்பட்டிருக்கிறது ஏனெனில், இங்கிலாந்து இத் தருணத்தைப் பயன்படுத்தி வெற்றி தனக்கு நிச்சயமெனும்படி வேண்டிய ஆயத்தங்களை நன்றாகச்செய்து கொண்டது. "ஹிட்லர் ஓர் அரிய தருணத்தை இழந்து விட்டார்" என்று திரு. சேர்ச்சில் கூறியது நோக்கத்தக்கதாகும். ஜேர்மனியோ உலகத்திலேயே பராக்கிரமம் பொருந்திய வல்லரசுகளுள் ஒன்று. அவ்வாறிருப்பினும், அதனால் இங்கிலாந்தை ஒருபோதும் வெல்ல முடியாது. பிரித்தானிய சக்கிராதிபத்தியமும் பிரெஞ்சுக் குடியரசும் சேனாபலத்திலும் மனோசக்தியிலும் ஹிட்லருடைய ஜெர்மனியைவிட எவ்வளவோ அதிகம் மேம்பட்டிருக்கின்றன.

திரு. சேர்ச்சில் பிரசங்கம்

சென்ற சனிக்கிழமை மான்செஸ்டரிலே நடந்த கூட்டமொன்றிலே திரு. சேர்ச்சில் வீராவேசத்துடன் பெருமுழக்கம் செய்தார். யுத்த தளவாடங்களை இன்னும் பெருக்குதற்கு லட்சக்கணக்கான தொழிலாளர் வேண்டுமாதலினாலே அவர்களையும் முன்வருமாறு கேட்டுக்கொண்டார். இக்காலத்துப் போரிலே பெண்களுடைய சேவை மதிக்கொணாப் பெருமையும் பொறுப்பும் வாய்ந்தது. அவர்கள் தங்கள் பிரயோசனமான சேவையைச் செவ்வனே செய்யும்பொருட்டு அவர்களைத் திரட்டி அவர்களுக்கேற்ற ஸ்தாபனங்களை அமைத்து நடத்தினால், ஜெர்மனியிலும்பார்க்கப் பிரித்தானிய பிரெஞ்சு தேசங்கள் இன்னும் வலிமையடையும். ஜெர்மனி முன்னவருடமாகப் போர் முயற்சிகளைச் செய்திருக்கிறது. ஆனால், சமாதான நிலையிலிருந்த இங்கிலாந்து இப்பொழுதுதான் யுத்தநிலைகொண்டிருக்கிறது. ஆகையினால் இந்த வேளையிலே பெண்கள் யாவரும் ஒரு நிமிஷமேனும் வீணாக்காமல் மிகவும் தீவிரமாக யுத்த முயற்சியில் ஈடுபட்டு உழைக்க வேண்டும். ஆபத்து வேளையிலே தங்கள் தேசத்திற்குத் தங்கள் கடமையைச் செய்வதிலே பெண்கள் ஒருபோதும் பின்னிடவில்லை. இதனைச் சரித்திரம் வலியுறுத்தும். இப்பொழுதும் அவர்கள் தேசசேவையின் பொருட்டுத் தளர்வின்றி முன்வருவரென்றே திரு. சேர்ச்சில் எதிர் பார்க்கின்றார்.

பிரிட்டிஷ் உள் நாட்டு முன்னணி

பிரித்தானியா உணவுப்பொருட்களுட் சிலவற்றைக் கட்டுப்படுத்தத் தொடங்கியிருக்கிறது. அவ்வாறு கட்டுப்படுத்துவதனாலே அப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு உண்டாகிவிட்டதாக விளங்கிவிடவேண்டாம். அவையெல்லாம் போர் தொடங்கமுன்பு இருந்தது போலவே இப்பொழுதும் மலிவாகவும் ஏராளமாகவும் அகப்படுகின்றது. அவற்றில் அனாவசியமாகச் செலவுசெய்யும் பணத்தை அவசியம் வேண்டிய யுத்த தளவாடங்களின் பொருட்டு உபயோகிப்பதற்கே பிரித்தானியா இவ்விதம் கட்டுப்படுத்துகின்றது.

ஜப்பானியர் ஆட்சேபனை

பத்திரிகைகளில் இத்தவாரப் புதினங்களுள் ஜப்பான் புதினம் விசேஷத்துவம் பெற்றது. தங்கள் தாய்நாட்டுக்கு "அஸாமா மாரு" என்னும் ஜப்பானிய கப்பலிலே பிரயாணஞ் செய்த ஜெர்மனியருள் யுத்தசேவைக்குரிய 21 பேரைப் பிரித்தானியர் கைது செய்தனர். அது பெருந் தவறென்று ஜப்பான் பலமாக ஆட்சேபித்தது. ஆனால் அது சர்வதேசவிதிகளுக்கு இணங்கியதுதானென்பது பிரிட்டிஷ் கூற்று. சென்ற மகாயுத்தத்திலும் நேசதேசங்களும் ஜெர்மனியும் இவ்விதம் தங்கள் பகைவரை நடுநிலைமைக் கப்பல்களிலே கைது செய்ததுண்டு. ஆகையால் இப்பொழுது செய்தது சட்டவிரோதமன்று என்பது புலப்படும். ஜப்பானிய வெளிநாட்டு மந்திரி தமது உத்தியோகத்தருடன் இதைப்பற்றிச் சம்பாஷித்த பொழுது, இந்த "அஸாமாரு" சம்பவத்தைப் பிரிட்டிஷார் பெரிய விஷயமாகக் கருதி ஆலோசனை செய்யவில்லையென்று அவர்கள் தங்களுள் நிச்சயித்துக்கொண்டார்கள். ஜப்பானியர் ஆட்சேபிப்பதற்கு வேறொரு காரணமும் உண்டு. ஜேர்மனியின் ஏற்றுமதி இறக்குமதிப் பொருளின் போக்குவரவுக்கு நேசதேசங்களால் முட்டுக்கட்டை ஏற்பட்டபொழுது அதனாலே ஜப்பானிய ஜெர்மனிய வர்த்தகம் பாதிக்கப்படலாயிற்று. ஜப்பானுக்கு அவசியம் வேண்டிய சில விசேஷ ஜெர்மன் பொருட்களும் தடைபடவே, அது உடனே தடைப்படுத்துவதைப்பற்றி ஆட்சேபித்தது. ஆட்சேபித்தும் பலனில்லாமற் போயிற்று. எனவே, அந்த விசேஷ பொருட்களைப் பெறுவதற்கு ஜப்பான் அமெரிக்காவை நோக்கவேண்டியதாயிற்று.

இப்பொழுது ஜப்பானுக்கு இன்னும் சங்கடமான நிலையேற்பட்டிருக்கிறது. அமெரிக்காவிடம் திரும்பிற்று. ஜப்பானிய அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தின் காலவெல்லை சில நாட்களுக்குமுன்பு முடிந்துவிட்டது. இனிமேல் இந்த இரு நாடுகளின் வர்த்தகத்தொடர்பு கிழக்கிலே அமெரிக்காவின் விஷேடமாக ஜப்பான் அனுசரிக்கும் போக்கிலேதான் தங்கியிருக்கிறது. அந்தப் போக்கு அமெரிக்காவுக்குப் பாதகமாயிருந்தால் அமெரிக்காவும் அதற்கேற்றபடி ஜப்பானுக்கு மாறாகப் பழிக்குப்பழி வாங்கும். இந்த வேளையிலே பிரித்தானியாவைப் பகைத்தல் ஜப்பானுக் [illegible]கும். ஏனெனில் ஜப்பா[illegible] பொருட்களுட் பெரும்பகுதி பிரித்தானிய சக்காரதிபத்தியத்திலே விளைப்படுகின்றது. ஜப்பான் தனக்கு அவசியம்வேண்டிய பருத்தி, உலோகங்கள், இயந்திரங்கள், பெட்ரோல், முதலிய பல பொருட்களுக்கு அமெரிக்காவையே நோக்கியிருக்கின்றது. சுருக்கிக் கூறுமிடத்து ஜப்பான் அமெரிக்காவுக்குக் குற்றம் செய்தால் ஜப்பானுக்கும் அதன் வர்த்தகத்துக்கும்தான் பெருங் கேடு விளையும். அஸாமாமாரு சம்பவத்தைப்பற்றி இவ்வாரம் திரு. சேம்பர்லேன் தமது பிரசங்கமொன்றிலே குறிப்பிட்டார். அப்பொழுது, மரியாதையீனமாகவோ ஜப்பானியரின் சுயமதிப்பை அலட்சியம் செய்தோ யுத்த உரிமைகளைப் பிரித்தானியா உபயோகித்ததாக ஜப்பான் கருதுவது விசனிக்கத் தக்கதென்றும், அதிபலம் வாய்ந்த பொறுப்பில்லாத பகைவருடைய முயற்சிகளை முறியடிப்பதிலே பிரித்தானியா சகலவிதமான நடவடிக்கைகளையும் கையாளவேண்டியிருக்கிறதென்றும் அவர் கூறினார். இது நிற்க, இனி ஜெர்மனிய போரைப் பற்றிச் சிறிது ஆராய்வாம்.

ஆகாயப் போர்

கடலிலே குறிப்பிடத்தக்கபடி விசேஷமாகக் கப்பற்போர் ஒன்றும் நடைபெறவில்லை. ஆனால் வெகுகாலமாகச் சொல்லிக்கொண்டிருந்த பெரிய தாக்குதலுக்கு ஆரம்பமாகப் போலும் ஜெர்மனி சென்ற திங்கட்கிழமை விமானப் போர் தொடங்கியிருக்கின்றது. பிரித்தானிய கரையோரமாக 400 மைல் தூரம் வரையிலே விமானப் படையெடுப்பு தோன்றியது. அது பல கப்பல்கள்மீது தான் தன் பலத்தைச் செலுத்தத் தொடங்கிற்று. ஆனால் பிரிட்டிஷ் விமானங்கள் பகை விமானங்களை இலகுவில் எதிர்த்து வெருட்டித் துரத்திவிட்டன. ஒரு பகை விமானம் ஏழு குண்டுகளை வீசிற்று. ஆனால் எல்லாம் குறி தவறிவிட்டன. அவர்களுடைய இலக்கு விசேஷம் இப்படித்தானிருக்குமானால் பிரித்தானியா போரில் வெல்லுவதென்பது கூறாமலே விளங்கும். பிரித்தானிய கப்பல்களைத் தாக்குவதற்குப் பகை விமானங்கள் மீண்டும் முயன்றன. ஆனால் அப்பொழுதும் அவை சித்தியடையவில்லை. அவை சித்தியடையாமைக்குக் காரணம் பகைவரினும் பார்க்கப் பிரித்தானியர் போர் முறைகளைத் திறம்படக் கையாளுதலாகும். நேசதேசங்கள் பகை விமானங்களை இலகுவிற் கண்டுபிடிக்கின்றன. அதனாலே நேசதேசவிமானங்கள் தாமதமின்றிப் பகைவரை யெதிர்க்கச் சித்தமாகிவிடுகின்றன. அன்றியும் பகைவருடைய விமானங்களினும் பார்க்க நேசதேச விமானங்கள் இயந்திரங்களாலும் ஆயுதங்களாலும், பறக்கும் கதி முதலியவற்றாலும் அதிகம் சிறப்புடையன.

—(வரும்).

KERALA
vep
SOAP
KERALA SOAP INSTITUTE, CALICUT.

கேரள வெப் சோப்
சருமத்திற்கு உற்சாகம் விளைக்கக் கூடிய உயர்தரமானது
அழகான பெண்களுக்குரிய சோப்
எங்கும் கிடைக்கும்
ஏஜென்ஸ்: தேவார் அன் கம்பனி, மெயின் ஸ்ரீட், கொழும்பு
Mis 159,71- 11-38—

Sipro
VEGETABLE SOAP

சுகபோகமான ஸ்நானத்திற்கு ஸிப்ரா
டொயிலெற் சவர்க்காரம்
சிறந்தது எது என்று கண்டு பிடிக்கும் பொது ஜனங்களுக்கு [illegible]வரை [illegible]வரும் தர முன்வராத மிக்ச் சிறந்த சவர்க்காரம்;
சரீரத்திலுள்ள தோலைச் சுத்த மாக்குகின்றது; மென்மையாக்குகின்றது; வசமாகுந் தன்மையும் வசிகரமுமுடையச் செய்கின்றது.
பெங்கால் கெமிக்கல் & பாமகோட்டிக்கல் லிமிற்றெட்
கல்கத்தா; பம்பாய்.
இலங்கை ஸோல் ஏஜண்டுகள்: தி யூவணற்றெட் ட்ரேடிங்கம்பெனி, தபாற்பெட்டி 377, கொழும்பு.
Mis159. 10-9-37—

விளம்பரம்.
கவனியுங்கள்
கைம் பெத்தாபுரம் ஸில்க்
2¼ × 5 ஸில்க் சரம் 1-க்கு ரூபா 1-4-0
டசின் 1-க்கு ரூபா 13—00 தான்
3 × 8 சில்க்வேட்டி 1-க்கு ரூபா 3-00
டசின் ஒன்றுக்கு ரூபா 32-00
மனேஜர், கிருஷ்ணவீவிங்பாக்டரி,
கோட்டார் P. O. திருவிதாங்கூர்.
(Y. 188—6-11-39—5-11-40.)

வியாபாரத்திற்கழகு
விளம்பரஞ் செய்தல்
அதற்குகந்தது
இந்துசாதனமே

தி மலாயன் டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க் கொம்பனி)
இரும்பு, பித்தளைச்சாமான்கள் சிமேந்து வகைகள் விற்பனவு செய்வோர்
பெரியகடை, யாழ்ப்பாணம்.
"புரொப்ரைட்டர்"
K. A. இரத்தினசிங்கம்
Y 50. 3-4-39 3-3-40

முதலியார் இராசநாயகமவர்கள்

மூன்றும் பக்கத் தொடர்ச்சி

ளின் கடனென்பது கூறாதேயமையும்.

இங்ஙனம் தனது வாழ்க்கை முற்றிலும் தமிழர்கட்குப் பயன்படுத்திய பெருந்தகையாளரின் மன்னுயிர் இறைவன் இணையடி நீழலில் இன்புற் றமைவதாக.

"வீழ்நாள் படாஅமை
நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்"

செயற் கரிய செய்வார்
பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

முதலியார் அவர்கள் எழுதிய முக்கிய கட்டுரைகளிற் சிலவற்றையும் ஆராய்ச்சி முன்னுரைகளிற் சிலவற்றையும் இங்குக் குறிப்பிடுகின்றோம்.

1. Note on "Nagadipa in the Tamil Classics—R. A. S. (CB) Journal Vol. XXVI No. 70, 1917.
2. Vijayabahu's inscription at Polonnoruwa—Ibid Vol. XXIX No 77. 1924.
3. The Tamil Kingdom of Jaffna and the early Greek writers.
4, The age of Sinnathamby Pulavar—Hindu Organ, 1934.
5 Origin of the Pallavas.—Indian Antiquary.
6. The Alakeswara Period—The Ceylon Literary Register—3rd Series Vol II.

௧. நாக வரலாறு—கழகேசரி ஆண்டுமலர்—1936.
௨. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் பேறு—நாவலர் நினைவுமலர்—1938.
௩. உயிரிளங்குமரன் நாடகம்—அணித்துரை—1935
௪. சங்கரவிலாசம்—அணித்துரை—1937
௫. கைலாயமாலை ஆராய்ச்சி முன்னுரை—1939
௬. பல்லவ உற்பத்தி—செந்தமிழ்த் தொகுதி XXI

பதிப்பித்த நூல்கள்

1. காதி Historical Manuscripts Commission—Bulletin No. 3, Tamil Documents in the Archives—Selected and Translated, 1937.
2. கதிரைநான்மணிமாலை—1938

ஆக்கி வெளியிட்ட நூல்கள்

1. Ancient Jaffna—1926.
2. Katragama—1938.
௩. யாழ்ப்பாணச்சரித்திரம்-1933
do ஆங்கிலேயர் காலம்—1934

குறிப்பு:- நண்பர் வெள்ளவத்தை மு. இராமலிங்கம் அவர்கள் தந்துதவிய குறிப்புக்களும் இதனகத்துச் சேர்க்கப்பட்டுள்ளன.

சிறந்த தேக்கு
குறைந்த விலையில்
பல்வேறு சைஸில் மிகச்சிறந்த றங்கூன் தேக்கங் குற்றிகள், சிறு துண்டுகள், பலகைகள் ஆகியவை புதிதாக இப்போதுதான் கப்பலில் வந்திருக்கின்றன.
'பவுண்மார்க் ஓடுகள்.' ஓடுகளின் ராசா என்று சொல்லத்தக்கது. வேறிடங்களில வாங்குதற்கு முன் தயவு செய்து "பவுண்மார்க்" ஓடுகளை உபயோகிப்போரிடம் விசாரித்துப் பாருங்கள். "குணம் பேசும்" மார்க்கட்டில் இதற்கிணையான ஓடுகிடையாது.
பினங்குக்கும் சிங்கப்பூருக்கும் கப்பல்டிக்கட்டுகள்.
கொழும்பு விலையில், மூன்றும் வகுப்பு டிக்கட்டுகளும் ஏனையவகுப்பு டிக்கட்டுகளும் இங்கு விற்கப்படும். கப்பல் புறப்படும் திகதிகளுக்கும் ஏனைய விபரங்களுக்கும் கீழ்க்காணும் விலாசத்திற்கெழுதுக.
எஸ். வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்
டெலிபோன் இல. 93 யாழ்ப்பாணம்
வி Y 49 12-8-38—11-8-39

திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரையறுத்தது)
அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.
ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்
வங்கித்தொழிலும் வியாபாரமும் இலாபகரமாய் நடக்கின்றன.
தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.
இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும் நிபந்தமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்வோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்!
வ. சோமசுந்தரம்,
காரியதரிசி.
(வி)
(Y. 182. 1-11-38 to 31-10-39)

பிரித்தானிய பெண்களின் சமாதானமுயற்சி

அரசரிடம் சென்ற தூது

டிசம்பர் மாதத்தில் 1,000 பெண்கள் அடங்கிய ஒருபெரிய சமாதான மகாநாடு வெஸ்ற் மினிஸ்றர் அபியில் நடைபெற்றது. எப்படியாவது யுத்தத்தை நிறுத்திவிட வேண்டுமென்பது அவர்கள் விருப்பம்.

மேற்படி கூட்டத்தை நடத்தியவர்கள் பீஸ்பிளெட்ஜ் யூனியன் என்னுங் கழகத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மௌனமாகப் பக்கிங்ஹாம் (அரசர்) அரண்மனைக்குச் சென்று தம் கோரிக்கையைச் சொல்லவேண்டுமென்றெண்ணியிருந்தனர். ஆயின் பொலிஸ் தலையிட்டால் எண்ணம் நிறைவேறவில்லை. முடிவில் ஒரு பிரதிநிதி கோஷ்டியை அனுப்பினார்கள்

அவர்களது கூட்டத்தில் ஒருவர் கீழ்க்காணுமாறு பேசினர்:-

உலகில் இங்கிலாந்துதான் பெரிய தேசமென்று இருக்குமானால், அது செய்த தவறைப் பகிரங்கமாக ஒத்துக்கொள்ளவேண்டும்.

நாம் ஹிட்லரிடம் நம்முடைய தவறுகளை ஒப்புக்கொள்ளுவோம். "அன்பரே! நீங்கள் இப்பொழுது செய்யும் பயங்கரமான காரியத்தை முன்னால் நாங்கள் செய்திருப்பது உண்மைதான். அதற்காக இப்போது வருந்துகிறோம். எனவே, இருகூட்டத்தாரும் கலந்து பேசிச் சமாதானஞ்செய்து கொள்வோம்" என்று சொல்வோம்.

இந்தப்பிரசங்கத்தை எல்லோரும் பாராட்டினர். கடைசியில் அதுவே தீர்மானமாயிற்று.

№ 523

சாலாமிஸ்திரி லேகியம்
இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.
இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாரு, சாலாமூஸ்லி, சப்பேமூஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முளைவிதை, காசப்பு, லங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணி பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.
இதனால் நீரழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிடுவதால் மேற்சொல்லியவியாதிகள் குணமடைவதுடன் சூதகவாயு பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் நீங்கி தேக புஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.
இந்த லேகியத்தின விலை ருத்[illegible] ஒன்றுக்கு ரூபா 20. அரைருத்தலுக்கு ரூபா 10 கால்ருத்தலு[illegible]ரூபா5 தபாற்செலவுபிரத்தியேகம்
சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாய் இராச்சியப்பகுதிக்கு வி. பீ. சட்டம் இல்லாததனால் முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும். இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை
ஸ்ரீ. சிவஞான ஆரோக்கிய வைத்தியசாலை,
வீட்டிலக்கம்38 பழையவாடிரோட்டு,கோட்டைமுனை,மட்டக்களப்பு,சிலோன்.
(Y 14-6-39 to 31-12-39)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and [illegible]ed by S. ADCHALINGAM, residing at Vannarponna; East, Jaff[illegible] and on behalf of the Proprietors, the Saiva Paripalana [illegible]ffna at their Press, the Saiva Prakasa Press, Vann[illegible]na or Thursday 8th Feberuary 1940.